பக்கங்கள்: பத்து

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:14 வள்ளுவர் ஆண்டு 2030 ஆனி 07 திங்கட்கிழமை [21-06-1999] UTHAYAN A LivelyNationalTamilDaily கதிர்: 177

## உலகக்கிண்ணம் ஆஸிக்கு பாகிஸ்தான் படு தோல்வி

லண்டன், ஜூன் 21

லண்டனில் பெரும் பரபரப்பாக நேற்று இடம்பெற்ற உலகக் கிண்ணத்துக்கான இறுதி ஆட்டத்தில் ஆஸ்திரேலியா மிக இலகுவாக வெற்றிவாகை சூடி வெற்றிக்கிண்ணத்தைக் கைப்பற்றிக்கொண்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி அடுத்தடுத்து விக்கெட்டுக்களை இழந்தது. 39 ஓவர்களில் சகல விக்கெட்டுக்ககளையும் இழந்து 132 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

தொடர்ந்து வெகு நிதானமாகத் துடுப்பெடுத்தாடிய

(10 ஆம் பக்கம் பார்க்க)

## காணாமற்போன படையினரின் பெற்றோர் புலிகளைச் சந்திப்பர்

### வன்னி செல்வதற்கு அனுமதி

கொழும்பு, ஜூன் 21

காணாமற்போன படையினரின் பெற்றோர் வன்னியில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குச் சென்று புலிகளுடன் பேச்சு நடத்தப் புலிகள் அனுமதி அளித்துள்ளனர் என்று காணாமற்போன படையினரின் பெற்றோர் சங்கத் தலைவர் என். நாணயக் ரர தெரிவித்தார்.

கிளிநொச்சி, பூநகரி, முல்லைத்தீவு ஆகிய முகாம்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களின்போதுகாணாமற்போன படையினரின் பெற்றோர் சுமார் ஆயிரத்து 500 பேர்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## செம்மணி விவகாரம்

# மற்றும் இரு சிப்பாய்களை யாழ். அழைத்துவர முடிவு!

## எலும்புகள் காலிக்கு

கொழும்பு, ஜூன் 21

செம்மணிப் புதைகுழியில் மீட்கப்பட்ட இரு எலும்புக் கூடுகளும் ஆய்வுக்காகக் காலி றுகுணுப் பல்கலைக்கழகத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளன. (இ-3-8-164)

## சிப்பாய் தலைசிதறி பலி!

வவுனியா, ஜூன் 21

சிகரெட் வாங்குவதற்காக மோட்டார் சைக்கிளில் சென்ற சிப்பாய் ஒருவர் வவுனியா படை முகாம் முன்பாகப் போடப்பட்டிருந்த தடை அரணுடன் மோதுண்டு தலை சிதறிப் பலியானார்.

கண்டியைச் சேர்ந்த எம். பி ஜெயசிங்க (வயது 28) என்ற சிப்பாயே மரணமானவர் ஆவார்.

கடந்த் வெள்ளிக்கிழமை இரவு 12 மணியளவில் வவுனியா எரிபொருள் நிலையத்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ஏனைய புதைகுழிகளையும் அடையாளம் காண்பதற்கு

கொழும்பு, ஜூன் 21

செம்மணியில் உள்ளதாகக் கருதப்படும் மனிதப் புதைகுழிகளைத் தோண்டும் அடுத்த கட்ட நடவடிக்கை பெரிய அளவில் ஆரம்பிக்கப்படும்போது புதைகுழிகள் தொடர்பாகத் தகவல் வெளியிட்டுள்ள இராணுவச் சிப்பாய்களான ஆர். ஏ. பெரேரா, ஜெயதிலகா ஆகியோர் யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வரப்பட உள்ளனர்,

சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரிகளை மேற்கோள் காட்டி செய்தி ஏஜென்ஸிகள் இத்தகவலை வெளியிட்டன.

கைதடி மாணவி கிருஷாந்தி குமாரசாமி கொலைவழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள சோமரத்ன ராஜபக்ஷ, ஆர். ஏ. பெரேரா,

(10 ஆம் பக்கம் பார்க்க)



அப்ப கார்கில் தோல்விக்கு இது அறிகுறியோ......!

## மடு உற்சவத்தின் போது பொலீஸார்தேவை இல்லை

### மன்னார் ஆயர் தெரிவிப்பு

மன்னார், ஜூன் 21

''மடுத்தேவாலய உற்சவத்தின்போது பொலீஸார் பணியில் ஈடுபடத்தேவையில்லை''

மேற்கண்டவாறு மன்னார் ஆயர் வண. ராயப்பு ஜோசெப் மன்னார் அரச அதிபர் எஸ். எம். குறூஸைக் கேட்டுள்ளார்.

உற்சவகாலத்தில் ஆயுதங்களுடன் நடமாடப் பொலீஸாரை அனுமதிக்கக் கூடாது என்றும் அரச அதிபரிடம் ஆயர் கேட்டுள்ளார்.

மன்னார் அரச அதிபர் இது விடயத்தைப் பாதுகாப்பு அமைச்சின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளார். (இ-3)

## இனப்பிரச்சினைத் தீர்வில் பிரிட்டன் உதவத் தயார்

### கன்சர்வேட்டிவ் எம். பி. தகவல்

கொழும்பு, ஜூன் 21

'இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண பிரிட்டன் உதவத் தயாராகவிருக்கின்றது' என்று பிரிட்டிஷ் கன்சர்வேட்டிவ் கட்சி ஆலோசகரான ஜோன் ஏர்ன் தெரிவித்தார்.

ஐ. தே. கவின் அழைப்பின் பேரில் இலங்கை வந்துள்ள இவர் இனப்பிரச்சினைத் தீர்வில் பிரிட்டன் அளிக்கக்கூடிய பங்கு தொடர்பாகப் பலதரப்பட்டவர்களுடன் பேசி வருகின்றார்.

பேச்சுவார்த்தைகளுக்குவிடுதலைப் புலிகள் முன் வர வேண்டும் என்பதே வெளிநாட்டு அரசாங்கங்களினதும் தனிப்பட்டவர்களினதும் விருப்பமாகும். ஆனால் இது

[10ஆம்பக்கம் பார்க்க]

## செம்மணிகொலைச் சூத்திரதாரிகளை கைதுசெய்துசட்டத்தின் முன்நிறுத்துக

### தமிழ்கட்சிகளின் தலைவர்கள் கோரிக்கை

கொழும்பு, ஜூன் 21

செம்மணிப் பகுதியிலுள்ள புதை குழிகளில் படையினரால் கைதுசெய்யப்பட்டவர்கள் கொலைசெய்யப்பட்டுப் புதைக்கப்பட்டுள்ளனர் என்பது உறுதியாகியுள்ளது.

ஆகவே இந்தக் கொலைகளின் சூத்திரதாரிகளைக் கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும்.

மேற்கண்டவாறு தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள்தெரிவித்துள்ளனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட உப-தலைவர் வீ. ஆனந்த சங்கரி, ஈ. பி. டி. பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா, ரெலோ அமைப்பின்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னிக்கான வாகன அணி ஓரிரு நாள்களில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 21

வன்னிக்கான நிவாரண வாகனத் தொடர் அணி சேவைகள் நாளை அல்லது நாளை மறுதினம் முதல் மீண்டும் நடைபெறும் என வவுனியா அரசாங்க அதிபர் கே. கணேஷ் தெரிவித்தார்.

வன்னிக்கான போக்குவரத்து இன்று முதல் பாப்பாமோட்டை வழியாக நடைபெறவிருக்கின்றது.

வவுனியா அரச அதிபர் இது குறித்து தகவல் தெரிவிக்கையில் வன்னிக்கான நிவாரண வாகனத் தொடர் அணிக்கு வவுனியா முதல் மல்லாவி வரை செஞ்சிலுவை சர்வதேசக் குழு வழித்துணை வழங்கும் என்றார். (இ21)

## மானிப்பாயில் இளைஞனின் சடலம்

மானிப்பாய், ஜூன் 21

மானிப்பாய் தெற்கில் இளைஞர் ஒருவரின் சடலம் பற்றையில் கிடந்து கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

செல்வராஜன் பிரதாபன் (வயது 24) என்பவரே இறந்தவர் ஆவார்.

வேலக்கைப் பிள்ளையார்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ஆனையிறவு மிகவும் கஷ்டமானசண்டைப்பகுதி

### சிரேஷ்ட அதிகாரிகள் கருத்து

கொழும்பு, ஜூன் 21

இலங்கையில் மிகவும் கஷ்டமான சண்டைப்பகுதி ஆனையிறவு என்று சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர் என்று கொழும்பு பத்திரிகை ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

அண்மையில் ஆனையிறவு முகாமுக்குச் சென்று திரும்பிய செய்தியாளர் ஒருவரிடம் மேற்கண்ட கருத்தை சிரேஷ்ட அதிகாரிகள் கூறினராம்.

ஆனையிறவு மற்றும் பரந்தன் முன்னணிக் காவலரணுக்கு அப்பால் உள்ள பகுதிகளில் கிளைமோர் குண்டுகள்

(10ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## வடக்கு—கிழக்கில்

# உயர்தர வகுப்பு வறிய மாணவருக்கு உதவுவதற்கு புலமைப் பரிசில் திட்டம்

## அடுத்த மாதம் அமுலுக்கு வருகின்றது

யாழ்ப்பாணம், ஜூன் 21

வடக்கு—கிழக்குமாகாணத்தில் உள்ள பாடசாலைகளில் ஜி. சீ. ஈ. (உயர்தர) வகுப்பில் கல்வி கற்கும் வறிய மாணவர்களுக்கு உதவும் நோக்குடன் புலமைப் பரிசில் திட்டம் ஒன்றை ஆளுநர் மேஜர் ஜெனரல் அசோகா ஜெயவர்த்தனா ஆரம்பித்துள்ளார்.

இந்தத் திட்டம் அடுத்த மாதம் முதல் நடைமுறைக்கு வருகின்றது.

இந்தப் புலமைப் பரிசில் திட்டத்துக்கு விண்ணப்பிப்பவர்கள் ஜி. சீ. ஈ. உயர்தர வகுப்புக்கு முதல் மொழி, கணிதம் உட்பட முழுமையாக வேண்டிய விசேட சித்திகளுடன் ஒரே அமர்வில் தகுதி பெற்றிருத்தலுடன் ஜி. சீ. ஈ. சாதாரணதரபரீட்சைமுடிந்த அடுத்த வருடத்திலேயே ஜி. சீ. ஈ. உயர்தரத்தில் சேர்ந்து படித்திருக்க வேண்டும்.

விண்ணப்பதாரியின் பெற்றோர் வடக்கு—கிழக்கு மாகாணத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்டிருப்பதுடன் அவர்களின் மாதாந்த வருமானம் ஆயிரத்து 500 ரூபாவுக்குக் குறைவாக இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரி தான் விண்ணப்பிக்கும் வலயத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் இருந்து ஜி. சீ. ஈ. சாதாரணதரப் பரீட்சைக்கு தோற்றியிருத்தல் வேண்டும்.

வலயத்துக்கு20மாணவர்கள் என்ற அடிப்படையில் வடக்கு—கிழக்கு மாகாணத்தில் உள்ள 24 வலயங்களையும் சேர்ந்த 480 மாணவர்களுக்கு வருடா வருடம் இந்த புலமைப் பரிசில்கள் ஆளுநரால் வழங்கப்படுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்தத் திட்டத்துக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் இது பற்றிய அறிவுறுத்தல்களையும் மாதிரி விண்ணப்பப்படிவங்களையும் அவர்களது பாடசாலை அதிபர்களிடம் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பிப்பதற்கான இறுதித் திகதி அடுத்த மாதம் 6ஆம் திகதி ஆகும்.

(இ-3-க)

### மீள் குடியமர்ந்த மக்களுக்கு உதவி

வலி.கிழக்கு, ஜூன் 21

இந்த ஆண்டு மே மாதத்திற்குப் பின்பு வன்னியில் இருந்து யாழ். மாவட்டத்தில் மீள் குடியமர்ந்துள்ளவர்களுக்கு இலவசமாகப் பொருள்கள் வழங்க யுனிசெவ் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

இவர்களுக்கு உணவுப் பொருள்கள் அல்லாத உடுபுடைவைகள், வீட்டுப் பாவனைப் பொருள்கள் போன்றவற்றை வழங்க இந்த நிறுவனம் முன்வந்துள்ளது.

இதன் பொருட்டு மே மாதத்திற்குப் பின்னர் யாழ். மாவட்டத்தில் மீள் குடியமர்ந்தவர்களின் விவரங்களை தருமாறு இந்த நிறுவனம் சகல பிரதேச செயலர்களையும் கேட்டுள்ளது.

(இ-180)

## அரசு - புலிகள் பேசுவது தவிர வேறு வழி இல்லை

### தொண்டா கூறுகிறார்

"இந்த நாட்டில் சமாதானம் தேவையென்றால் அரசும் விடுதலைப் புலிகளும் பேசத்தான் வேண்டும். இதனைத் தவிர வேறு வழிகளினால் சமாதானத்தைக் காண முடியாது."

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ்தலைவரும் அமைச்சருமான எஸ். தொண்டமான் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"ஈழம்" என்ற கொள்கை பலரும் நினைப்பது போன்று விடுதலைப் புலிகளினால் முன்வைக்கப்பட்டது அல்ல.

வட்டுக்கோட்டை மாநாட்டில் ஜனநாயக அமைப்பான தமிழர் விடுதலைக் கூட்டணியினால் அது முன்வைக்கப்பட்டது.

விடுதலைப் புலிகளின் போராட்டம் கூட ஜனநாயக அமைப்பு ஒன்றினால் முன்வைக்கப்பட்ட ஜனநாயக உரிமைகளுக்கான போராட்டம்.

ஒரு நோக்கத்துக்காகப் போராடுபவர்களை பயங்கரவாதிகள் என்று கூறுவது ஏற்றுக் கொள்ளக்கூடியது அல்ல.

இப்படி அவர் மேலும் கூறினார். (இ-21)

## புளொட் வரவேற்பு

மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம்மூலம் பேச்சுவார்த்தை நடத்தி வடக்கு—கிழக்கு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வரவேண்டும் என்று அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே தெரிவித்த கருத்துக்குப் புளொட் வரவேற்புத் தெரிவித்துள்ளது.

பி. பி. ஸி. சிங்களச்சேவையான "சந்தேசிய" வுக்கு அளித்த பேட்டியில்அமைச்சர் இதனைவலியுறுத்திஇருந்தார்

இதனை வரவேற்று புளொட் உபதலைவர் என். மாணிக்கநாசன் விடுத்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

மூன்றாம் தரப்புமத்தியஸ்தத்தை வரவேற்பதாக அமைச்சர் எந்த நோக்கத்துடன் கூறியிருந்தாலும், மூன்றாம் தரப்பின் நல்நோக்கத்தின் ஊடாக அரசு ஆயுத சக்திகளை நிராயுதபாணிகளாக்கும் கபட நடவடிக்கையில் ஈடுபட எத்தனிக்கலாம்.

ஆகவே மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் என்பது சரணாகதி அல்ல. சமரசம் என்னும் அடிப்படையில் அமையவேண்டும்.

கருவி ஒப்படைப்பு என்பது தமிழ் மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய தீர்வுகள் நடைமுறைப்படுத்தப்பட்ட பின்பே தீர்மானிக்கப்படவேண்டிய விடயமாகும்—என்றுள்ளது. (இ-ரி)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஜூன் 21

கோட்டைக்காடு சாளம்பை முருகமூர்த்தி ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் இன்று திங்கட்கிழமை காலை 10 மணிக்கு ஆரம்பமாகித் தொடர்ந்து 12 தினங்கள் நடைபெறும்.

ஜூலை முதலாம் திகதி தீர்த்த உற்சவமும் மறு நாள் 2 ஆம் திகதி பூங்காவனமும் முருகனின் திருக்கலியாணமும் நடைபெறும். (க-ரி)

★ ★ ★

கொழும்புத்துறை, ஜூன் 21

யாழ். குடாநாட்டில் உள்ள பெரும்பாலான கிறிஸ்தவ தேவாலயங்களில் புனித ஞானப்பிரகாசியார் விழாவும் திவ்விய நற்கருணைத் திருவிழாவும்இன்றுதிங்கட்கிழமை காலை திருப்பலிப் பூசையுடன் நடைபெறும். (ஐ-30)

★ ★ ★

யாழ். சுண்டிக்குளி புனித யுவானியார் (திருமுழுக்கு அருளப்பர்) ஆலய வருடாந்தத் திருவிழா கடந்த 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பங்குத்தந்தை அருள் திரு நேசநாயகம் அடிகள் தலைமையில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

எதிர்வரும் 24 ஆம் திகதி வியாழக்கிழமை காலை நடைபெறும் திருவிழா திருப்பலியுடனும் திருச்சுருப பவனியுடனும் விழா நிறைவு பெறும். (ஐ-30)

★ ★ ★

கொழும்புத்துறை மணலியம்பதி அருள்மிகு ஸ்ரீ அம்மன்—ஐயனார் ஆலயத்தில் பகல் ஆனி உத்தரம் விசேட அபிஷேகமும் பூசையும் இடம்பெறும். பின்பு அம்மன்—ஐயனார் வீதி வலம் வருவர். (இ-30)

## பளையில் இரண்டாவது தும்புத் தொழில் நிலையம்

வடமராட்சி, ஜூன் 21

வடக்கு—கிழக்கு மாகாண தொழிற்துறைத் திணைக்களத்தின் அனுசரணையுடன் பளைப் பிரதேச செயலகப் பிரிவில் இரண்டாவது தும்புத் தொழில் பயிற்சி நிலையம் கடந்த வாரம் மாசார் கிராமிய அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் பளைப் பிரதேச செயலர் சு. புத்திசிகாமணியினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஏற்கனவே புலோப்பளையில் நடத்தப்பட்ட தும்புத் தொழில் பயிற்சி பெற்ற பயிலுநர்களுக்கு 6 மாதப் பயிற்சி முடிவில் தலா ரூ. 10 ஆயிரம் வீதம் சுயதொழில் முயற்சிக் கடன் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

பிரதேசத்தில் உள்ள அனைத்துக் கிராம அலுவலர் பிரிவுகளிலும் தும்புத் தொழில் பயிற்சி நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## மரண அறிவித்தல்

### திருமதி இராஜலிங்கம் மனோன்மணி

பன்னாலையைப் பிறப்பிடமாகவும் சுழிபுரம் மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராஜலிங்கம் மனோன்மணி 20-06-99 ஞாயிறன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சி. இராஜலிங்கத்தின் அன்பு மனைவியும், வைத்திலிங்கம், புவனேஸ்வரி, சங்கரப்பிள்ளை, ஏரம்பமூர்த்தி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் 21-06-99 இன்று திங்கள் காலை 10 மணிக்கு திருவடிநிலை மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. வீமதேவன்.
(மருமகன்)

சுழிபுரம் மத்தி,
சுழிபுரம்.

(சி/7951)

## தொண்டாவுக்கு எதிராக வழக்கு; வீரவிதான அமைப்பு அச்சுறுத்தல்

கொழும்பு, ஜூன் 21

அமைச்சரும் இ. தொ. கா. தலைவருமான எஸ். தொண்டமானுக்கு எதிராக பத்துக் கோடி ரூபா நஷ்டஈடு கோரி வீரவிதான அமைப்பு வழக்குத் தொடரப் போவதாக அறிவித்துள்ளது.

தமது அமைப்பை இனவாத,பயங்கரவாத அமைப்பு என்ற பொய்யான அறிக்கையை அமைச்சர் தொண்டமான் விடுத்துள்ளார் என்றும்—

இதன் மூலம் தமது அமைப்புக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தியமைக்காக நஷ்டஈடாக அவர் பத்துக் கோடி ரூபா வழங்கவேண்டும் என்றும்—வீரவிதான அமைப்பு அமைச்சருக்கு அனுப்பியுள்ள நோட்டீஸில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வீரவிதான அமைப்பு அமைச்சர் தொண்டமானின் கட்சி அலுவலகத்துக்குள் புகுந்து ஆர்ப்பாட்டம் நடத்தியதும்—

அந்த ஆர்ப்பாட்டத்துக்கு எதிராக இ. தொ. கா. பேரணி நடத்த முடிவு செய்ததும்—

ஜனாதிபதியின் கோரிக்கையின் பேரில் அந்தப் பேரணி கைவிடப்பட்டதும்—தெரிந்தவையே. (இ-3-8)

புலமைப்பரிசில்
1999
சனி நடைபெற்ற 43 ஆவது
பயிற்சி வினாத்தாள்களும்
ஞாயிறு நடைபெற்ற
44 ஆவது பயிற்சி
வினாத்தாள்களும்
விடைகளுடன் கிடைக்கும்.
BOND யாழ் நகர்.
(66769)

நாகம்ஸ்
சுன்னாகம்
முரளி, சூர்யா,
ஜீவிதா, ராதிகா
நடித்த
காதலே நிம்மதி
காட்சிகள் 11.00, 2.30
[புதிய நேரம்]
[66702]

ராஜா
யாழ்ப்பாணம்
விஜய், தேவயானி,
ரம்பா, மணிவண்ணன்,
செந்தில்
மற்றும் பலர் நடித்த
நினைத்தேன்
வந்தாய்
10.30, 2.30

## சுகாதார ஊழியர்களுக்கு கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூன் 21

யாழ். மாநகரசபை சுகாதாரப் பிரிவைச் சேர்ந்த சுகாதார வெளிக்கள ஊழியர்களுக்கான 'தாய்ப்பால் கொடுக்கும் தற்போதைய முறைகள்' பற்றிய விளக்கம் அளிக்கும் கருத்தரங்கு எதிர்வரும் வியாழக்கிழமை நாவலர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

"யுனிசெவ்" நிறுவனத்தின் நிதியுதவியுடன் மாநகர சபை சுகாதாரப் பிரிவு செயற்படுத்தி வரும் நகர்ப்புற அடிப்படைச் சேவைகள் திட்டத்தின் கீழ் மேற்படி கருத்தரங்கு நடத்தப்படவுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் சுகாதார வெளிக்கள ஊழியர்களுக்கு, தாய்மார்கள் தமது குழந்தைகளுக்கு தற்போது தாய்ப்பால் கொடுக்கும் முறைகள் குறித்தும் —

அதனால் ஏற்படும் நன்மைகள் தீமைகள் குறித்தும்—

சிறந்த முறையில் ஒரு தாய் தனது குழந்தைக்கு எவ்வாறு பாலூட்ட வேண்டும் என்பது குறித்தும் —

விளக்கமளிக்கப்படவுள்ளது.

கருத்தரங்கில் பங்கு கொள்ளும் வெளிக்கள ஊழியர்கள் பாலூட்டும் தாய்மார்களுக்கு தாய்ப்பாலூட்டும் சிறந்த முறை குறித்தும் அதனால் ஏற்படும் நன்மைகள் குறித்தும் எடுத்துக் கூறுவர். இதன் மூலம் பாலூட்டும் தாய்மார்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

(ஐ - 6)

## உடற் பயிற்சி போட்டிகள்

யாழ்ப்பாணம் கல்வி வலயத்துக்கு உட்பட்ட யாழ்ப்பாணம், நல்லூர்ப் பிரிவு பாடசாலைகளுக்கு இடையிலான உடற்பயிற்சிப் போட்டிகள் நாளை மறுதினம் முதல் நடைபெறவிருக்கின்றன.

நல்லூர்ப் பிரிவுப் போட்டிகள் நாளை மறுதினம் புதன் கிழமை பிற்பகல் 2-00 மணி முதல் கொக்குவில் இந்து மைதானத்திலும் —

யாழ்ப்பாணப் பிரிவு போட்டிகள் எதிர்வரும் வியாழக் கிழமை பிற்பகல் 2-00 மணி முதல் கனகரத்தினம் ம.வித்தியாலயத்திலும்—

யாழ். வலய இறுதிப் போட்டிகள் எதிர்வரும் வெள்ளிக்கிழமை பிற்பகல் 2-00 மணி முதல் கனகரத்தினம் ம. வித்தியாலயத்திலும் — நடைபெறும். [இ-3]

## அதிகாரிகள் குழு அனலைதீவுக்கு

தீவக கல்வி வலய அதிகாரிகள் குழு கடந்த வெள்ளிக்கிழமை கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன் தலைமையில் அனலைதீவு சென்றது.

அங்கு உள்ள மூன்று பாடசாலைகளையும் மேற்பார்வை செய்ததுடன் கல்விச்சீர்திருத்தங்கள் பற்றிய கலந்துரையாடலையும் அவர்கள் அங்கு நடத்தினர்.

ஏற்கனவே இக் குழுவினர் நெடுந்தீவு, நயினாதீவு, எழுவைதீவு ஆகிய இடங்களுக்குச் சென்று வந்தமை குறிப்பிடத்தக்கது. [இ-73]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தோனேசியத் தேர்தல் முடிவு
# ஜூலை 8 ஆம் திகதியே வெளியாகும்

ஜஹார்த்தா, ஜூன் 21

இந்தோனேஷியாவில் நடைபெற்ற தேர்தல் முடிவுகள் ஜூலை மாதம் 8ஆம் திகதியே அறிவிக்கப்படும் என பொதுத் தேர்தல் ஆணையகம் தெரிவித்துள்ளது.

இன்று தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்படும் என முன்னர் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் நேற்று வரை 48 சத வீத வாக்குகளே எண்ணப்பட்டன. மீதி வாக்குகள் எண்ணும் நடவடிக்கை நிறைவு பெறாதபடியாலேயே மேற்படி அறிவித்தல் விடப்பட்டுள்ளது.

மேஹவதி சுஹர்ணோ புத்திரியின் ஜனநாயகக் கட்சியே தற்போதும் முன்னணியில் இருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

சுஹர்ணோ புத்திரியின் கட்சி [illegible] சத வீத வாக்குகளையே பெற்றிருப்பதால் கூட்டணி அமைத்திட மேலும் ஒரு எதிர்க்கட்சியை அழைக்க வேண்டியிருக்கும் என ஆய்வாளர்கள் கருத்துத் [illegible]விக்கின்றனர்.



மேகவதி சுஹர்ணோபுத்திரி

# கொசோவோவில் ரஷ்யப்படையின் பணிகள்குறித்துஉடன்பாடுஏற்பட்டது

பிறிஸ்ரீனா, ஜூன் 21

கொசோவோ மாகாணத்தில் அமைதி காக்கும் பணியில் ரஷ்யப் படைகள் ஈடுபடுவது குறித்து அமெரிக்காவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையில் உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இந்த உடன்படிக்கையின் கீழ் கொசோவோவின் தென் கிழக்குப் பகுதியில் அமெரிக்காவின் கட்டுப்பாட்டுக்குள் உள்ள பிரிவுக்குள்ளேயே ரஷ்யாவிற்கு ஒரு பகுதி ஒப்படைக்கப்படும்.

இதேபோல் ஜேர்மன் மற்றும் பிரான்ஸின் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலும் ரஷ்யப் படைகள் நிறுத்தப்படும்.

பிரிட்டனின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள பிறிஸ்ரீனா விமான நிலையத்தில் எல்லா நாடுகளினதும் அமைதி காக்கும் படையினர் நிறுத்தப்பட்டிருப்பர்.

அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் வில்லியம்கோஹெனுக்கும் ரஷ்யப் பாதுகாப்பு அமைச்சர் ஈகர் இவனோவுக்கும் இடையிலான பேச்சுக்களின் பின்னர் இந்த உடன்பாடு எட்டப்பட்டது.

கொசோவோ சென்றுள்ள சர்வதேசப் படையில் நேட்டோவின் தலைமையில் செயற்பட ரஷ்யா மறுத்ததுடன் ரஷ்யத் தளபதி ஒருவரின் கீழே ரஷ்யப் படைகள் கொசோவோவில் இயங்க ரஷ்யா விருப்பம் தெரிவித்திருந்ததும் தெரிந்ததே.

(ஐ-க)

# பலத்த பாதுகாப்பு மத்தியில் எட்வேர்ட்-சோபி திருமணம்

லண்டன், ஜூன் 21

பிரித்தானிய இளவரசர் எட்வேர்ட்டுக்கும் சோபி ஜோன்சுக்கும் கடந்த சனிக்கிழமை வின்சன்ட் நகரில் பலத்த பாதுகாப்பு மத்தியில் கோலாகலமாக திருமணம் நடைபெற்றது.

திருமண நிழ்வின் போது பிரித்தானிய அரசியினால் எட்வேர்ட்டுக்கு கோமகன் என்ற பட்டம் சூட்டப்பட்டது.

மன்னர் ஆட்சிக்கு எதிர்ப்பு தெரிவிப்பவர்கள் இந்த வைபவம் நடைபெறுவதை எதிர்த்து ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டதைத் தொடர்ந்தே அரண்மனையைச் சுற்றிலும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

1952 ஆம் ஆண்டு 6 ஆம் ஜோர்ச் மன்னரின் இறுதிச் சடங்கின் பின்னர் இடம் பெற்ற முதலாவது மிகப் பெரிய சடங்காக இளவரசரின் திருமணம் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

# காஷ்மீரில் தொடர்ந்து கடும் பீரங்கித் தாக்குதல்

புதுடில்லி, ஜூன் 21

கார்கில் பகுதியில் இந்தியப் படையினருக்கும் ஊடுருவல்காரர்களுக்கும் இடையே கடும் பீரங்கித் தாக்குதல்கள் இடம் பெறுவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த 36 மணி நேரத்தில் நோலோரிங் பகுதியில் எதிரணியின் நான்கு நிலைகள் அழிக்கப்பட்டதாகவும் இந்தச் சம்பவத்தில் 10 பாகிஸ்தானிய வீரர்களும் 8 ஊடுருவல் காரர்களும் கொல்லப்பட்டதுடன் 6 இந்திய வீரர்கள் உயிரிழந்ததாகவும் இந்திய இராணுவத் தரப்பு தெரிவித்துள்ளது.

மீட்கப்பட்ட நான்கு நிலைகளில் இருந்தும் பெருமளவு ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'புலி மலை ப்பகுதியை கைப்பற்றும் முயற்சியில் இந்திய இராணுவத்தினர் திட்டமிட்டபடி ஈடுபட்டு வருகின்றனர்.

இதே சமயம் —

இதுவரை இடம்பெற்ற மோதல்களின் போது இந்தியத் தரப்பில் 112 பேர் உயிரிழந்தனர். 249 பேர் காயமடைந்துள்ளனர். 8 பேர் காணாமற் போயுள்ளனர்.

பாகிஸ்தான் தரப்பில் 313 பேர் உயிரிழந்ததாக இந்திய தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

ஜம்மு பகுதியில் வெளியேறிய மக்களைச் சந்திப்பதற்காக உள்துறை அமைச்சர் எல். கே. அத்வானி நேற்று அங்கு சென்றார்.

(ஐ-க)

# அமெரிக்க இரட்டையருக்கு ஒரே சமயத்தில் மார்பு வலி!

டெட்றொயிற், ஜூன் 21

ஒரே சமயத்தில் மார்பு வலியால் தாக்குண்ட இரட்டையர்கள் என்று இனி அவர்கள் தம்மை அழைத்துக்கொள்ளலாம்.

ஆம்! அமெரிக்காவைச் சேர்ந்த இரட்டையர்களுக்கே இந்தப் பெயர் கிடைத்திருக்கிறது,

அவர்கள் இருவருக்கும் 66 வயது. ஒருவர் பெயர் றிச்சார்ட் டெனிஸ்லூட் அடுத்தவரின் பெயர் றொபேர்ட்.

றிச்சார்ட்டுக்கு திடீரென மார்புவலி ஏற்பட்டதை அடுத்து அவரது மனைவி அவரை டெட்றொயிற்றில் உள்ள மருத்துவமனை ஒன்றில் கொண்டு போய்ச் சேர்த்தார்.

சிறிது நேர இடைவெளியில் அவர் தங்கியிருந்த வார்ட்டுக்கு மற்றொரு இருதய நோயாளி அழைத்து வரப்பட்டார். அவர் வேறுயாருமல்ல றொபேர்ட் தான்.

''நீ எப்படி இங்கே வந்தாய்?'' என்று இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்து வியந்தபடி மாறிமாறிக் கேட்டனர்.

இருவருக்கும் அங்கு ஒன்றாகச் சிகிச்சை அளிக்கப்பட்டது.

'ஒக்லண்ட்' செய்தி நிறுவனம் கடந்த செவ்வாயன்று இந்த இரட்டையரின் கதையை வெளியிட்டது.

(ஐ)

# 'ஜி-8' நாடுகள் முடிவு

ஹொலோன், ஜூன் 21

யூகோஸ்லாவியாவின் அதிபராக சொலபொடான் மிலேசெவிக் இருக்கும்வரை கொசோவோவின் புனரமைப்பு பணிகளுக்கு சர்வதேச நிதி உதவி வழங்கப்படக்கூடாது.

இவ்வாறு ஜேர்மன் நகரமான ஹொலோனில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் 'ஜி-8' தொழில் வள நாடுகளின் உயர் மாநாட்டில் நேட்டோ கூறியுள்ளது — இதனை அமெரிக்கா வரவேற்றுள்ளது.

ஆனால் இந்த முடிவினை ரஷ்யா கண்டித்துள்ளது. இதனால்மேலைத்தேயநாடுகளுக்கும்-ரஷ்யாவுக்கும் இடையில் முறுகல் நிலை தோன்றியுள்ளது.

இம்முறுகல் நிலையை அடுத்து 'ஜி-8' தொழில்வள நாடுகளின்மாநாட்டில் கலந்து கொள்ள ரஷ்ய அதிபர் யெல்ட்சின் ஹொலோன் நகருக்கு செல்ல இருந்தார். (க)

# கொழும்பில் குண்டு மீட்பு; ஐவர் கைதாகி விசாரணை

கொழும்பு, ஜூன் 21

கொழும்பு நகர் சென்றல் வீதியில் சக்தி வாய்ந்த குண்டு ஒன்று நேற்று முன்தினம் சனிக்கிழமை விசேட பொலீஸாரினால் கண்டுபிடிக்கப்பட்டு செயலிழக்கப்பட்டுள்ளது.

காலையில் மேற்படி இடத்தில் மின்மாற்றி ஒன்றுக்கு அருகில் இருந்தே இந்தக் குண்டு கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மின்மாற்றி ஒன்றை திருத்துவதற்காக மின்சார சபை ஊழியர்கள் வேலைக்கு வந்த போது அங்கு மின்மாற்றி அருகில் பொருள் ஒன்று மறைத்து வைக்கப்பட்டிருந்ததை அடுத்து ஊழியர்கள் பொலீஸாருக்கு அறிவித்துள்ளனர்.

இதனைபடுத்து அந்த இடத்துக்கு விரைந்த புறக்கோட்டைப் பொலிஸார் குண்டைப் கண்டுபிடித்து செயலிழக்க வைத்தார்கள்.

இது தொடர்பாக புறக்கோட்டைப் பொலீஸ்நிலைய பொறுப்பதிகாரி விக்கிரமசிங்க தகவல் தருகையில் குறித்த இந்தக் குண்டு ஒன்றரைக் கிலோ எடையுடையது என்றும் இது வெடித்தால் பாரிய சேதம் ஏற்படும் என்றும் கூறியதுடன் இது தொடர்பாக சந்தேகத்தின் பேரில் ஐவர் கைது செய்யப்பட்டு விசாரணைகள் நடத்தி வருவதாகவும் கூறினார்.

## நீர்விநியோக திட்டம் விஸ்தரிப்பு

நெடுந்தீவு, ஜூன் 21

நெடுந்தீவு மேற்குப் பகுதிக்கு குடிதண்ணீர் விநியோகத் திட்டம் விஸ்தரிக்கப்படும்.

இதற்கென பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் ஒரு லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பிரதேசசபைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

(ஐ-111)

# தென்மராட்சி ஆலயங்களில் பட்டப் பகலில் திருட்டுகள்

தென்மராட்சி, ஜூன் 21

தென்மராட்சி பிரதேசத்தில் உள்ள இந்து ஆலயங்களில் பட்டப்பகலில் திருடர்கள் தமது கைவரிசையை காட்டி வருகின்றனர்.

சாவகச்சேரி துர்க்கை அம்மன் கோயிலில் கடந்த வியாழக்கிழமை பகல் பூசை முடிந்து பூசகர் சென்ற பின்னர் அம்பாளின் கழுத்திலிருந்த தங்கத் தாலி, 3 உண்டியல்களிலிருந்த பணம், ஒலி பெருக்கிச் சாதனங்கள் ஆகியன கொள்ளையிடப்பட்டன.

மட்டுவில் வடக்கு முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் வெள்ளிக்கிழமை பகல் பூசை முடிந்தபின் முகாமையாளர் ஆலயமுன்றலில்தனித்திருந்து தேவாரம் பாடிக்கொண்டிருந்த வேளையில் அங்குவந்த இருவர் கோவிலைச் சுற்றி கும்பிடப்போவதாகக் கூறி உட்சென்று உள் மண்டபத்தினுள் அம்பாளின் கழுத்தில் அணிந்திருந்த ஒன்றரைப் பவுண்சங்கிலி உட்பட வேறு பலபொருள்களையும்அபகரித்துக் கொண்டு தெற்குப் பக்க வாசலால் வெளியேறி விட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இத் திருட்டுக்கள் தொடர்பாக சாவகச்சேரி பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

சாவகச்சேரி துர்க்கை அம்பாள் ஆலயத்தில் திருடப்பட்ட ஒலிபெருக்கிச் சாதனங்களில் ஒன்று சாவகச்சேரி நகர்ப் பகுதி நேதீர்க்கடை ஒன்றின் உரிமையாளருக்கு விற்கப்பட்ட பின்னர் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

(ஐ-117)

# தொழில்வாய்ப்புக்கு உதவுவதால் வணிகக் கல்விக்குச் சிறப்பிடம்

## சஞ்சிகை வெளியீட்டு விழாவில் உரை

வலிகாமம்,தெற்கு,ஜூன் 21

''1970 ஆம் ஆண்டுகளுக்குப் பின்னர் வணிகக் கல்வியின் வளர்ச்சி கவர்ச்சி கரமான தொழில்களைத் தரும் சிறப்புத் துறையாக வளர்ச்சி கண்டுள்ளது. கடும் போட்டியினை அது எதிர்கொண்டதன் காரணமாக வணிகத் துறை உயர்ந்த தர நிலையை இன்று அடைந்துள்ளது. அதன் காரணத்தால் பலர் இதன் பால் ஈர்க்கப்பட்டுள்ளனர்''

[illegible] வர்த்தக மாணவ மன்றத்தினரால் வெளியிடப்பட்ட ஐந்தாவது 'வணிகநாதம்' மலர் வெளியீட்டு விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய யாழ். உயர்தொழில்நுட்ப நிறுவனப் பணிப்பாளர் ரி. இராஜரத்தினம் மேற்கண்டவாறு கூறினார்.

செல்வன் இலட்சுமணன் ரமணன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் செல்வன் பு. பாலேந்திரா வரவேற்புரை நிகழ்த்தினார்.

பணிப்பாளர் ரி. இராஜரத்தினமும் அவரது பாரியார் திருமதி சித்திரா இராஜரத்தினமும் பிரதம விருந்தினர்களாக கலந்துகொண்டனர்.

பணிப்பாளர் ரி. இராஜரத்தினம் தனது உரையில் கூறியதாவது.

மனிதசமுதாயத்தின் அபிவிருத்தியில் வணிகம் முக்கிய இடத்தைப் பெறுகிறது. தகவல் தொழில்நுட்பம் (E-Mail) விரைவாக வளரும் இக்காலத்தில் வணிகத்துறையினருடன் கல்வியாளர்கள், மாணவர்கள் இணைந்து வணிகத்தின் வளர்ச்சிக்கு மேலும் வலுவூட்டி வருகின்றனர். அதன் ஓர் அங்கமாகவே மாணவர்களின் இது போன்ற சஞ்சிகை வெளியீடு

(9 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### HOUSE FOR SALE

Three Roomed house at St. Anne's Road with Water Service, Elect icity and Drainage with attached Bath Room and Toilet facilities Close to St John's College, Rasiah, 22, St. Annes Road, Colombogam Road, Chundikuli. (66719)

### வி பனைக்கு

கென்வூட் டபிள்டோர் குளிர்சாதனப் பெட்டி விற்பனைக்குண்டு. கைலாயபிள்ளையார் தெற்கு வீதி, 292/4, நாவலர் வீதி, பழைய உதயன் பணிமனை லேன், யாழ்ப்பாணம். (66748)

### யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணத்தின் கடந்த இருபது வருட கால வரலாற்றைப் பதிவு செய்து வைத்திருக்கும் சிறுகதைகள். சிந்திக்கலாம், சிரிக்கலாம், பரிதாபப்படலாம், அழலாம். 50 சிறுகதைகள் எழுதிய அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் நூல் 50/- [66757]

### மணமக்கள் தேவை

பிரான்ஸ், ஜேர்மனி' அவுஸ்திரேலியா கனடா ஆகிய நாடுகளுக்கு வெளிநாட்டு உள்நாட்டு மணமக்கள் தேவை. பெண்கள் வெளிநாட்டில் உள்ளவர்களும் தொடர்புகொள்ளவும். ராசாத்தி அபிராமி திருமண சேவை, ஆடியபாதம் சந்தை வீதி, 1 ஆம், ஒழுங்கை, கொக்குவில். (66739)

### மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த வயது 53, மாதம் 9000/- சம்பளம் எடுக்கும் உயர்பதவி வகிக்கும் அரச உத்தியோகத்தருக்கு மணமகள்தேவை. தொடர்பு: விளம்பர இல 893, மே/பா உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். [66721]

### தவறிவிட்டது

ஊரெழு மேற்கு என்னும் முகவரியில் உள்ள கணேஷ் புனிதவதி என்பவரின் விஷேட அ. அட்டை 18 - 06 - 99 அன்று ஊரெழுவிற்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் மினிபஸ்ஸில் பிரயாணம் செய்யும் பொழுது தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் திருநெல்வேலியிலுள்ள உழவர் களஞ்சியத்தில் கொடுத்து தகுந்த சன்மானத்தைப் பெற்றுக் கொள்ளவும். (66740)


# மாகாண சேவையில் இணைந்தோர் மத்திய அரச சேவைக்கு மாற வசதி

நவாலி, ஜூன் 21

அரச திணைக்களங்களில் மத்திய அரசின் கீழ் பணியாற்றி மாகாண அரச சேவைக்கு விடுவிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் விரும்பினால் மீண்டும் மத்திய அரச சேவையில் சேர முடியும்.

இதற்கான அனுமதியை பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு சுற்றறிக்கை மூலம் சகல அரச திணைக்களங்களுக்கும் அறிவித்துள்ளது.

இவ்வாறு சேர விரும்புகின்றவர்கள் மத்திய அரச சேவையில் தொடர்ந்தும் பணியாற்றுமிடத்தில் பெறக்கூடிய உத்தியோக உயர்வு, பெறக்கூடிய சம்பள ஏற்றம் ஆகிய அடிப்படையிலேயே மீண்டும் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

ஆனால் இவர்கள் மாகாண அரச சேவையின் போது பெறப்பட்ட பதவி உயர்வுகள் சம்பள ஏற்றங்கள் என்பவை மத்திய அரச சேவையில் பெறக் கூடியதிலும் பார்க்க அதிகமாக இருப்பின் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர் அவற்றை இழக்க சித்தமாக இருக்க வேண்டுமென சுற்றறிக்கையில் வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளது. (ஐ-100)

## ஊக்குவிப்புக் கடன்

கந்தரோடை கிராமசேவையாளர் பிரிவில் உள்ள வறுமைக் கோட்டுக்கு கீழ்வாழும் ஐம்பது குடும்பங்களுக்கு சுயதொழில்ஊக்குவிப்புக்கடனை அகதிகளுக்கான ஐக்கியநாடுகள் தூதரகம் வழங்க உள்ளது.

ஆடு, மாடுகள் வளர்த்தல், கோழிப்பண்ணை அமைத்தல், சிறு வியாபார முயற்சி, தையல் நிலையம் அமைத்தல் போன்ற சிறுதொழில்முயற்சிகளை ஆரம்பித்து வருமானம் பெற வசதியளிக்கும் முகமாக கந்தரோடைக் கிராமத்தில் 50 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

ஒவ்வொருவருக்கும் பத்தாயிரம் ரூபா வீதம் ஐந்து லட்சம் ரூபா வழங்கப்படும். (ஐ-152)

## சுன்னாகம் சந்தை புனரமைப்பு ஆரம்பம்

சுன்னாகம் சந்தை புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. சந்தை உட்புறக் கடைகள் திருத்தியமைக்கப்படுவதுடன், மீன் சந்தையும் திருத்தம் செய்யும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மீன் சந்தை திருத்தவேலைகள் காரணமாக, சைக்கிள் பாதுகாப்பு நிலையமாக இருந்த இடத்தில் மீன் வியாபாரம் நடைபெறுகிறது.

கடந்த இராணுவ நடவடிக்கைகளின் போது சேதமடைந்திருந்த இச் சந்தை ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தின் உதவியுடன் புனரமைக்கப்படவுள்ளமை தெரிந்ததே. (ஐ-27)

## கூட்டுறவுச் சங்கத்தில் ஊக்குவிப்புப் பரிசுத்திட்டம்

தென்மராட்சி, ஜூன் 21

சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் அங்கத்தவர்களிடையே ஊக்குவிப்புப் பரிசுத் திட்டத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது.

மாதாந்தம் அதிக அளவு பொருள்கள் சங்கக் கிளைக் கடைகளில் கொள்வனவு செய்யும் அங்கத்தவர்களுக்கே சீட்டிழுப்பு மூலம் ஊக்குவிப்புப்பரிசில்கள் வழங்கப்பட உள்ளன.

அரிசி, மா, சீனி, பால்மா, மண்ணெண்ணெய், பருப்பு ஆகிய பொருள்கள் தவிர்ந்த ஏனைய பொருள்கள் கொள்வனவு செய்யும் பற்றுச் சீட்டுக்களை மாத முடிவில் சங்கத் தலைமைக் காரியாலயத்தில் ஒப்படைத்தால் அந்த மாதத்தில் அதிக அளவு பொருள்களைக் கொள்வனவு செய்தோரில் சீட்டிழுப்பு மூலம் தெரிவு செய்யப்படுவோருக்கு பெறுமதிமிக்க பரிசில்கள் வழங்கப்படவுள்ளதாக சங்கத் தலைவர் இ. இராசகுலசிங்கம் தெரிவித்துள்ளார். (ஐ-117)

## வீதிகளில் குப்பை தீக்கிரை

வீதிபோரப் புல் பூண்டுகளை வெட்டி அந்த இடத்திலேயே எரிக்கும் நடவடிக்கை வலி. தெற்குப் பிரதேச சபையின் சில பகுதிகளில் மேற்கொள்ளப்படுகிறது.

முன்னர் இவை உழவு இயந்திரம் மூலம் ஏற்றிச் செல்லப்படும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

முருகேச பண்டிதர் வீதிப் பகுதியில் சிறு சிறு குவியல்களாகக் குப்பையைக் குவித்துக்கொளுத்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.


A GURANTEED PRODUCT

KOBE ANTENNA BOOSTER NO:1 SELLER IN SRI LANKA

FROM LANKA NIPPON

AVAILABLE ISLANDWIDE

ASK YOUR NEIGHBOUR FOR 'KOBE' PERFORMANCE

LANKA NIPPON

18. KEYSER STREET. COLOMBO-11

Tel: 324726. 437735 FAX: 437736

[சி/7004]



## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள Brand New Model, Mitsubishi Lancer Wagon 14 Sri தொடர் விற்பனைக்கு உண்டு.

Power Steering, Power Window, Mirror. AC, Radio மற்றும் Gas Cylinder இலும் இயங்கக்கூடியது.

தொடர்பு:

இராமலிங்கம்

ராஜா தியேட்டர், யாழ்ப்பாணம். (66767)


## தொண்டர் ஆசிரியர்களின் விவரம் திரட்டல்

தொண்டர் ஆசிரியர்களாகக் கடமை புரியும் அனைவரும் தங்களது கல்விச் சான்றிதழ் (சா/த, உ/த), பிறப்புச்சான்றிதழ், வதிவிடச் சான்றிதழ், பாடசாலை விடுகைப்பத்திரம், கிராம அலுவலரின் நற்சான்றிதழ், வலயக் கல்விப்பணிப்பாளரினால் உறுதிப்படுத்தப்பட்டு அதிபரினால் வழங்கப்பட்ட சேவைக்காலச் சான்றிதழ் 94,96 ஆண்டின் ஆசிரிய போட்டிப் பரீட்சைப் புள்ளிகள் என்பவற்றின் மூல, நிழற்பிரதிகளுடன் கோவை ஒன்றுடனும் கீழ்க்காணும் திகதிகளில் சமுகம் தரவும்.

23 - 06 - 99 புதன் காலை 9 — 4 மணி வரை 95 ஆம் ஆண்டிற்கு முன்

24 - 06 - 99 வியாழன் காலை 9 — 4 மணி வரை 96 ஆம் ஆண்டிற்குப் பின்

இடம்: டி. எம். ஐ. கல்வி நிலையம் ஆரியகுளம் சந்தி.

குறிப்பு: புதிய பதிவுகள் மேற்கொள்ளப்படமாட்டாது. வருடாந்த சந்தா ரூபா 60 செலுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தொண்டர் ஆசிரியர் சங்கம்

யாழ். மாவட்டம்

(66765)

## மீட்டல் பரீட்சை

பருத்தித்துறை, ஜூன் 21

வடமராட்சி கல்வித் திணைக்களத்தினால் தரம் ஒன்பது கணித பாடத்தில் அலகு ஏழு வரை உள்ளடக்கிய அலகுகளுக்கான மீட்டல் பரீட்சை எதிர்வரும் 25 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

வினாத்தாள்களை மருதங்கேணிக் கல்விக்கோட்டப் பாடசாலைகள் அம்பன் அமெரிக்கன் மிஷன் பாடசாலையிலும்—

கரவெட்டி கல்விக்கோட்டத்தினர் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்திலுள்ள ஆசிரியர் பயிற்சி நிலையத்திலும்—

பருத்தித்துறை கல்விக் கோட்டப் பாடசாலைகள் வலயக் கல்வித்திணைக்களத்திலும்—

நாளை மறுதினம் புதன் கிழமை பெற்றுக்கொள்ளலாம் என வலயக் கல்விப் பணிப்பாளர் சி. சிவராசா அறிவித்துள்ளார். (ஐ-118)

## மரண அறிவித்தல்கள்

### செல்லையா சிவசின்னம்

(ஓய்வுபெற்ற சிரேஷ்ட தொழில் நுட்பவியலாளர்-பெருந்தெருக்கள் திணைக்களம், நாளந்தை)

வண்ணார்பண்ணை கிழக்கு 74/2 அரசடி ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும், அராலி தெற்கை வதிவிடமாகவும், தம்புல்லை பெருந்தெருக்கள் திணைக்கள விடுதியை (Quarters) வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா சிவசின்னம் சனிக்கிழமை (19-06-1999) காலமானார்.

அன்னார் காலம்சென்ற செல்லையா, சௌந்தரம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும், அன்னரத்தினத்தின் அன்புக் கணவரும் அன்புமல் (ஆசிரியை இசிப்பத்தானா மகாவித்தியாலயம் கொழும்பு), தர்மசீலன் (லண்டன்), ஜெயசீலன் (டுபாய்), குணசீலன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவலிங்கம் (லண்டன்), தெட்சணாமூர்த்தி (தொழில் நுட்பவியலாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற இராசநாயகம்பிள்ளை (P. H. I.) யின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று திங்கட்கிழமை (21-06-1999) கம்புல்லை மயானத்தில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்

செ. தெட்சணாமூர்த்தி (சகோதரர்)

50/2, சொர்ணவீதி,
கே. கே. எஸ். வீதி, கொக்குவில் (66761)

### கார்த்திகேயக் குருக்கள் சிதம்பர நடராஜக் குருக்கள்

துன்னாலை தேனப்பாய் வீரபத்திரர் கோயிலடியைப் பிறப்பிடமாக கொண்டவரும் கோயிற்கடவை பிள்ளையார் கோயில் முன்னாள் பிரதமகுருவும் காலி கலுவல கதிரகேசன் கோயில் பிரதமகுருவுமாகிய கா. சிதம்பரநடராஜக் குருக்கள் வெள்ளிக்கிழமை இரவு காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஞாயிற்றுக்கிழமை (20-6-99) காலி மயானத்தில் நடைபெற்றது. இத் தகவலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

கா. சபாரத்தினக் குருக்கள் (சகோதரன்)

குருமணல் கந்தசாமி கோயில்,
பருத்தித்துறை.

துன்னாலை மத்தி,
கரவெட்டி. (66768)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பிரதேச செயலக பணியாளர்கள் மத்திய அரச நிர்வாகத்தின் கீழ்

யாழ்ப்பாணம், ஜூன் 21

நாட்டின் சகல பிரதேச செயலகங்களிலும் பணிபுரியும் வெளிக்கள உத்தியோகத்தர் தவிர்ந்த அனைவரும் அடுத்த வருடம் தொடக்கம் மத்திய அரசாங்கத்தின் நிர்வாகத்துள் உள்வாங்கப்படுவர் என பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு அறிவித்துள்ளது.

இவ்விடயம் தொடர்பான சுற்றறிக்கை ஒன்றையும் குறித்த அமைச்சு சகல பிரதேச செயலகங்களுக்கும் அனுப்பி வைத்துள்ளது.

இதுவரை காலமும் சகல பிரதேச செயலர்களும் மத்திய அரசாங்கத்தின் கீழும், ஏனைய ஊழியர்கள் மாகாண அரசாங்கத்தின் கீழும் உள்வாங்கப்பட்டிருந்தனர்.

இனிமேல் பிரதேச செயலகங்களில் பணிபுரியும் வெளிக்கள ஊழியர்கள் தவிர்ந்த அனைத்து ஊழியர்களினதும் இடமாற்றம், சம்பளம், ஓய்வூதியம் மற்றும் ஏனைய விடயங்களை மத்திய அரசாங்கமே மேற்கொள்ளும் என அந்தச் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-7)

## தமிழ்மொழிதினப் போட்டி திருமலைக்கு முதல் இடம்

திருகோணமலையில் கடந்த வெள்ளியன்று நடைபெற்ற வடக்கு — கிழக்கு மாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான தமிழ் மொழித் தினப் போட்டி முடிவுகளின் படி திருகோணமலை கல்வி வலயம் அதிக புள்ளிகளைப் பெற்று முதல் இடத்தைப் பெற்றுக்கொண்டுள்ளது.

வலய மட்டப் போட்டிகளில் பங்குபற்றி முதல்இடத்தைப் பெற்ற நிகழ்ச்சிகளே மாகாண மட்டப் போட்டிகளில் பங்கு பற்ற அனுமதிக்கப்பட்டிருந்தன.

கல்வி வலயங்களும் அவை பெற்றுக்கொண்ட புள்ளிகளின் விவரங்களும் வருமாறு:

★ திருகோணமலைக் கல்வி வலயம் — 90 புள்ளிகள்

★ வவுனியா தெற்கு கல்வி வலயம் — 59 புள்ளிகள்

★ மட்டக்களப்பு கல்வி வலயம் — 50 புள்ளிகள்

★ மன்னார் கல்வி வலயம் — 45 புள்ளிகள்

★ வலிகாமம் கல்வி வலயம் —32 புள்ளிகள்[யாழ். மாவட்டம்]

★ யாழ்ப்பாணக் கல்வி —வலயம் —23 புள்ளிகள்

★ அக்கரைப்பற்றுக் கல்வி வலயம் —15 புள்ளிகள்

★ பட்டிருப்பு கல்விவலயம் —10 புள்ளிகள்

★ தென்மராட்சி கல்வி வலயம் —10 புள்ளிகள்[யாழ். மாவட்டம்] [இ-7]

## கலட்டியில் இளைஞன் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 21

யாழ். கலட்டிச்சந்தியில் நேற்று முன்தினம் இளைஞர் ஒருவர் படையினரால் கைது செய்யப்பட்டதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது

மூளாய் ஆலடியைச்சேர்ந்த உருத்திரமூர்த்தி பேரின்பமூர்த்தி (வயது 21) என்பவரே கைது செய்யப்பட்டவராவார்

இவரது கைது தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். மாவட்ட இணைப்பதிகாரி எஸ். ஸ்ரீதரன் படை அதிகாரிகளுடன் உடனடியாகத் தொடர்பு கொண்டார்.

கைதான இளைஞர் ஊரெழு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக படைத்தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-5)

## சமய அறிவுப் போட்டி

கொழும்புத்துறை ஜூன் 21

கொக்குவில் நந்தாவில் கற்புலத்து ஸ்ரீமனோன்மணி அம்பாள் ஆலய வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு கொக்குவில் மனோன்மணி சனசமூக நிலையத்தினர் ''சமய அறிவுப்போட்டி'' யினை நடாத்தவுள்ளனர்.

தரம் 4 தொடக்கம் தரம் 11 வரை கல்வி கற்கும் மாணவர்கள் இப்போட்டியில் பங்குபற்றலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. (க-30)

## கட்டாக்காலி கால்நடைகள் தொல்லை

நவாலி, ஜூன் 21

நவாலி ஆனைக்கோட்டைப் பகுதிகளில் மீண்டும் கட்டாக்காலி கால்நடைகளின் தொல்லை அதிகரித்துள்ளது.

இவை இரவு வேளையில் வீட்டு வளவுகளுக்குள் புகுந்து பயன்தரு பயிர்களை அழித்து வருவதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். [ஐ-100]

## நிவாரணம் விநியோகம்

நவாலி, ஜூன் 21

மானிப்பாய் ப. நோ. கூ. சங்கக் கிளைகளில் 68 ஆவது ஏ.பி. உலர் உணவு முத்திரைப் புள்ளிகளுக்கு உணவுப் பொருள்கள் தற்போது வழங்கப்படுகின்றன.

இம் முறை குத்தரிசி, சீனி, [illegible] பால்மா என்பன நிவாரணப் பொருள்களாக வழங்கப்படுகின்றன. [ஐ-100]

---

யா\ புனித
**ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்**
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

### வருடாந்தப் பொதுக்கூட்டம்

காலம்: 11-07-1999 ஞாயிற்றுக்கிழமை
காலை 10. 00 மணி

இடம்: பாடசாலை மண்டபம்

தலைவர்:
அருட்செல்வி G. செல்வராணி A. C.
(அதிபர்)

அனைவரையும் தவறாது பங்கு கொள்ளுமாறு தயவாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

க. அரியநாயகம்
செயலாளர்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
19-06-1999 (சி/7950)

---

### அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 05 — 09 — 1956



மறைவு 23 — 05 — 1999

திருமதி
**சறோஜா பாலசுந்தரம்**

நாளை (22 — 06 — 1999) செவ்வாய்க்கிழமை கொம்மந்தறை இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிரியைகளிலும் மதிய போசனத்திலும் பங்குபற்றுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

23 — 05 — 1999 ஞாயிற்றுக்கிழமை காலமான திருமதி சறோஜா பாலசுந்தரம் அவர்களின் இறுதிக் கிரியை, தகனக்கிரியைகளில் நேரில் கலந்தும் மலர் வளையம் வைத்தும் உதவிய ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

— குடும்பத்தினர்
திரு. து. பாலசுந்தரம் (அதிபர்),
கைதடி விக்கினேஸ்வர வித்தியாலயம்,
நாவற்குழி, கைதடி.

கொம்மந்தறை,
வல்வெட்டித்துறை. (66732)

---

### விற்பனைக்கு

டைனமோ, 3 K. V. குளிர்சாதனப் பெட்டிக்குரிய காஸ்சிலிண்டர் மற்றும் யூனிற்செற் வகைகள், கால் மிதிவகைகள், பிளாஸ்ரிக் தும்புத்தடி, கயிறு வகைகள், கோழித்தீன். மாட்டுத்தீன் வகைகள் விற்பனைக்கு உண்டு.

**நாதன் களஞ்சியம்**
இல. 213C, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

T. P. 2916 (66743)

---

### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 24 — 01 — 1927



மறைவு 03 — 07 — 1998

**அமரர் கதிரித்தம்பி கந்தசாமி**
திதி: 21 – 06 – 99

ஆண்டு ஒன்று தான் என்ன?
ஆயிரம் தான் சென்றிடினும்
எம் இதயத்தில் வாழுகின்ற
உங்கள் நினைவு அகன்றிடுமா?

ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கும்
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

மீசாலை மேற்கு,
மீசாலை. (66764)

---

### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**திருமதி புனிதவதி நல்லதம்பி**
(உரும்பிராய் மேற்கு)

மலர்வு 12 – 03 – 1925
உதிர்வு 01 – 07 – 1998

திதி: 21 – 06 – 1999

எங்கள் குடும்பத்தின் குலவிளக்கே! தாங்கள் மறைந்து ஓராண்டு பூர்த்தியடைகிறது. ஆனால் எங்கள் எல்லோரது நெஞ்சங்களிலும் நிறைந்து இருக்கின்றீர்கள். உலகுள்ளவரை உங்களை மறக்கவே மாட்டோம். எங்கள் நெஞ்சங்களில் அழியாத ஓவியமாக அமைந்துவிட்டீர்கள்.

தங்களது ஆன்மா சாந்தியுறும் வண்ணம் எல்லாம் வல்ல இறைவனின் திருவடிகளைப் பிரார்த்திக்கின்றோம்.

கணவர், மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

மானிப்பாய் வீதி,
உரும்பிராய். (66762)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் கணபதயே நமஹ

குப்பிழான்

## கற்கரைக்கற்பக விநாயகர் திருக்கோயில்

## உபயகாரர்களுக்கான கூட்டமும், புதிய நிர்வாகசபைத் தெரிவிற்கான பொதுக்கூட்டமும் - 1999

உபயகாரர்களுக்கான கூட்டம்:-
1999 – 06 – 25 [வெள்ளிக்கிழமை] மாலை 3.00 மணி

புதிய நிர்வாகசபைத் தெரிவிற்கான பொதுக் கூட்டம்:-
1999 – 06 - 26 [சனிக்கிழமை] மாலை 3.00 மணி

தலைவர்:- திரு. சோ. பரமநாதன்
(ஆலய பரிபாலன சபைத் தலைவர்)

இடம்:- ஆலய முன்றல்

ஆலயத்தில் விழாக்கள், அபிஷேகங்கள் செய்யும் உபயகாரர்கள் தவறாது சமுகமளிக்கவும்.

செயலாளர்
ஆலய பரிபாலன சபை

[66751]


## சப்பற வெள்ளோட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 21

ஏழாலை—புங்கடி சொர்ணாம்பிகை சமேத அம்பலவாணேஸ்வரர் ஆலயத்துக்கென புதிதாக அமைக்கப்பட்ட சப்பறத்தின் வெள்ளோட்ட விழா கடந்த வியாழனன்று பிற்பகல் 4 மணியளவில் நடைபெற்றது.

புதிய சப்பறத்தை உருவாக்கிய திருநெல்வேலி திர்ஷிகா கலைக்கூட ஸ்தபதியார் விஸ்வப் பிரம்ம ஸ்ரீ ந. சற்குருநாதன் மற்றும் அவரது குழுவினர் யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் பா கோபாலகிருஷ்ண ஐயரால் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர். (ஐ–7)

## தராசுப்படிகளுக்கு முத்திரையிடல்

கொழும்புத்துறை, ஜூன் 21

சாவகச்சேரி பிரதேச செயலகத்தில் நாளை செவ்வாய்க்கிழமை தொடக்கம் 24 ஆம் திகதி வியாழக்கிழமை வரையும், ஜூலை முதலாம் திகதி வியாழக்கிழமை தொடக்கம் 6 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரையும் புதன்கிழமை தவிர்ந்த ஏனைய நாள்களில் காலை 9.00 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணி வரை நிறுத்தல் அளவை உபகரணங்களுக்கு முத்திரையிடும் பணி இடம்பெறும். (ஐ–30)


யாழ்நகரில்!

ஆண் பெண் இருபாலாருக்கும்
LUMALA CYCLE

சகல உதிரிப்பாகங்களுடன் நியாயமான விலையில் விற்பனைக்கு உண்டு.

குறிப்பு;- வியாபாரிகளுக்கு விசேட கழிவு வழங்கப்படும்.

மகாலட்சுமி ஸ்ரோர்ஸ்,
இல. 162, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/7948)

நியூ விமாகி

★ குளியலறை சாதனங்கள்
★ பலவர்ணங்களில் ஸ்கொட்டிங்பான், வோஷ்பேசின்
★ Kitchen சிங்க், Steel சிங், யூரினல்ஸ்
★ எண்ணற்ற டிசைன்களில் சுவர் மாபிள் (Wall tiles)
★ நில மாபிள் (Floor Tiles)
★ உள்நாட்டு வெளிநாட்டு மாபிள் வகைகளை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள வேண்டிய இடம்

மற்றும் P.V.C குழாய்கள் Tapகள் G.I சீற், போமிக்கா தரைவிரிப்புகள்

ரீ செற், டினர் செற், கிளாஸ் பிளேற்ஸ், கிளாஸ் வகைகள், செரமிக் பிளேற்ஸ் கறிடிஷ், கப் & சோசர், றைஸ் பிளேற்ஸ்

Fuji pot set, Apple set, Tea pot, Jug

மாபிள் விற்பனையில் வடபகுதியில் முன்னணி ஸ்தாபனம்

நியூ விமாகி,
27/3, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

[66750]



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## வெள்ளிவிழா இன்றைய நிகழ்ச்சிகள்

இசை அரங்கு
1999 - 06 - 21 திங்கட்கிழமை மாலை 3 மணி

நிகழ்ச்சி நிரல்

தமிழ் வாழ்த்து

தொடக்கவுரை:
பேராசிரியர் இ. குமாரவடிவேல்
முதுநிலைப் பேராசிரியர் / பேரவை உறுப்பினர்

வாழ்த்துரை:
வண. கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம்
பேரவை உறுப்பினர்

இசை அரங்கு மாலை 3. 30 மணி – 5. 30 மணி

ஆக்க இசை:
'ஞானக்குயில்'
கலாநிதி என். சண்முகலிங்கன்

நாடக மேடைப்பாடல்
தொகுத்தளிப்பவர்:
பேராசிரியர் அ. சண்முகதாஸ்

பிரவேசம் இலவசம்

ஆர்வலர் அனைவரும் வருக!

(சி/7940)



## வைத்தியம்

செங்கண்மாரி, அல்சர், ஆஸ்துமா, வாதநோய்கள், வலிப்புநோய், பீனிசம், தலையிடி, தலைகால் அவியல், சருமநோய்கள், மாதவிடாய்க் குத்து, இரத்தப் போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, குழந்தை வைத்தியம், வீரியக் குறைவு, மூலவியாதிகள், மூத்திரரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துபவர்.

வேலணை
வைத்திய கலாநிதி
சி. இராசரத்தினம்,
121, 2 ஆம்
குறுக்குத்தெரு
யாழ்ப்பாணம்.
தொலைபேசி எண்: 2459

[66401]


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் இளையதம்பி சின்னத்துரை

[ இளைப்பாறிய இ.போ.ச. பரிசோதகர், காரைநகர் ]

தோற்றம்: 14-07-1922

மறைவு: 02-07-1998

திதி: 21-06-1999

அன்புக்கினிய எங்கள் ஐயாவே!
அன்பாகப் பாசமாக எம்முடன் வாழ்ந்தீரே!
பாதிதனிலே எம்மையெல்லாம் விட்டுப் பிரிந்தீரே!
ஆண்டு ஒன்று என்ன எத்தனை ஆண்டுகள்தான்
சென்றாலும் உங்கள் நினைவுகள் எங்கள்
நெஞ்சில் என்றும் நிலைத்திருக்கும்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்,
உறவினர்கள்.

பண்ணாகம்,
சுழிபுரம்.

(66754)


உ
கணபதி துணை
ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ

## திருமண அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் பிரமாதி வருடம் ஆனிமாதம் 9 ஆம் நாள் (23 - 06 - 1999) புதன்கிழமை காலை 7. 37 மணி முதல் 9. 33 மணிவரையுள்ள சுபமுகூர்த்த வேளையில்,

எமது புத்திரன்
திருநிறை செல்வன்
**தெய்வேந்திரராசா**
(வவா)
அவர்களுக்கும்



எமது புத்திரி
திருநிறை செல்வி
**விக்னேஸ்வரி**
(விமலா)
அவர்களுக்கும்

நல்லூர் இளங் கலைஞர் மன்றத்தில் (கலா மண்டபம்)
திருவருள் துணை கொண்டு திருமணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்து இருப்பதால் அத்தருணம் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்துச் சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்கனம் தங்கள் நல்வரவை நாடும்:

திருமதி நடராசா - இரத்தினமணி
குடும்பத்தினர்
காளிகோயிலடி, பத்தமேனி, அச்சுவேலி.

தற்போதைய முகவரி:
சந்தை ஒழுங்கை, மானிப்பாய்.

திரு, திருமதி சதாசிவம் குடும்பத்தினர்
திரு. திருமதி கேதீஸ்வரன் குடும்பத்தினர்
மாவிட்டபுரம், தெல்லிப்பழை.

தற்போதைய முகவரி:
இல. 133, [illegible] வீதி,
யாழ்ப்பாணம்.

[66727]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## இரவல் சேலையிலே கொய்யகம்!

யாழ்ப்பாணக் குடாநாட்டைத் தான் கைப்பற்றிய பின்னர் இங்கு பெரிய அளவில் புனர்வாழ்வு புனரமைப்புப் பணிகளைச் செய்து வருவதாக அரசாங்கம் கூறிவருகிறது. ஆனால் அது முற்றிலும் பிரசார நோக்குடையதே என்பதனை குடாநாட்டு மக்கள் அறிவர்.

வெளிநாட்டுத் தொண்டர் நிறுவனங்களின் புனரமைப்பு, புனர்வாழ்வுப் பணிகள் நடைபெறும் வேகத்திலும் கனதியிலும் அரசாங்கத்தின் திட்டங்கள் செயற்படவில்லை என்பதே உண்மை. இது குறித்து அரசாங்க அதிகாரியிடம் விளக்கம் கேட்டால், வெளிநாட்டுத் தொண்டர் நிறுவனங்களின் பணிகள் யாவும் அரசாங்கத்தின் பங்களிப்புடன் அதனுடன் இணைந்தே செயற்படுத்தப்படுவதாகக் கூறிச் சமாளித்து விடுகிறார்கள்.

ஆனால் இது உண்மை அல்ல என்பதனை, ஐரோப்பிய நாடுகளின் ஒன்றியம், கொழும்பில் வெளிவிவகார அமைச்சுக்கு அனுப்பிய கடிதம் ஒன்றில் புட்டுக்காட்டி உள்ளது. யாழ்ப்பாணத்தில் தாம் செய்யும் புனர்வாழ்வுபுனரமைப்பு பணிகளுக்கு அரசாங்கம் தேவையான அளவில் தலைமை வகிக்கவில்லை, வழி நடத்தவில்லை என்று ஏமாற்றம் தெரிவித்திருக்கிறது அந்த ஒன்றியம்.

அது மட்டுமா? அன்பளிப்புச் செய்யும், உதவி வழங்கும் சர்வதேச சமூகத்தின் பணிகளை ஸ்ரீலங்கா அரசு வெறுமனே அனுபந்தப்படுத்திக் கொண்டிருக்கிறதே அன்றித் தனக்குரிய பங்கினை ஆற்றவில்லை என்றும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

மேலும் குடாநாட்டுக்கும், கொழும்புக்கும் — ஏனைய மாவட்டங்களுக்கும் — இடையிலான நிரந்தரமான, சீரான போக்குவரத்துச் சேவை எதனையும் அரசு அக்கறையுடன் ஏற்பாடு செய்யாததால், தங்களது பணிகளுக்குக் குந்தகமாக இருப்பதாகவும் வெளிவிவகார அமைச்சிடம் கையளித்த கடிதத்தில் ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்திருக்கிறது.

போக்குவரத்து வசதி சீராக, ஒழுங்காக, நிரந்தரமாக இல்லாததால் வெளிநாட்டு நிபுணத்துவத்தைப் பெறுவதற்கானதமது செலவு நாற்பத்தைந்துசதவீதத்தாலும், மேலதிக துணைச் செலவு முப்பது சத வீதத்தாலும் உயர்ந்துள்ளதாக அந்தக் கடிதத்தில் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மக்களின் புனர்வாழ்விலும், குடாநாட்டின் புனரமைப்பிலும் அரசாங்கம் கட்டும் வாய்ப்பந்தல் செயலில் எந்தளவு குறைவாகவும், மந்தமாகவும் உள்ளது என்பது இப்போது அம்பலமாகியுள்ளது. இந்தக்குறைபாடுகளை, போலித்தனத்தை நாம் எடுத்துக் கூறினால் அரசுக்குப் பொத்துக் கொண்டு கோபம் வந்துவிடும்; மறுத்துரைக்கும் ஆனால், உள்வீட்டிலிருந்தே உண்மை வந்திருக்கிறது.

அதன் பின்னராவது அரசு தனது பொறுப்பை உரிய அளவுக்கு ஏற்றுள்ளதா என்றால் இல்லை. ஐரோப்பிய ஒன்றியத்தின் கடிதம் கையளிக்கப்பட்டு ஒரு மாதம் கடந்துவிட்டது. நிரந்தரமான, சீரான போக்குவரத்துச்சேவை இன்னும் ஏற்பாடாகவில்லையே! சாட்டுச் சொல்லும் படலமே தொடருகிறது.

இரவல் சேலையிலே இது நல்ல கொய்யகமாம் என்ற ஒய்யாரத்துடன், தனக்குரிய பொறுப்பைச் சரிவரச் செய்யாமல், தமிழர்களை மட்டுமன்றிச் சர்வதேசத்தையும் ஏமாற்ற முனைந்துள்ளது அரசு. இதனால் வரும் விளைவை அது மட்டுமன்றி யாழ்ப்பாண மக்களும் அல்லவா பாதிக்கப்படப் போகிறார்கள்.

### 'யுனிசெவ்' நிதி உதவியுடன்

## நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் மலசலகூடம், கிணறு புனரமைப்பு

வலி.கிழக்கு, ஜூன் 21

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் ஆயிரத்து 500 ரூபாவுக்குட்பட்ட வருமானமுடையவர்களுக்கு சேதமடைந்த கிணறுகள் மலசலகூடங்கள் புனரமைப்புக்காக யுனிசெவ் நிறுவனத்தினால் நிதி உதவி வழங்கப்படவுள்ளது.

இப்பிரதேசசெயலர்பிரிவில் இரு கிணறுகள் தலா 40 ஆயிரம் ரூபா செலவில் புதிதாக கட்டப்படவுள்ளன. 20 கிணறுகள் புனரமைக்கப்படவுள்ளன.

புனரமைக்கப்படும் ஒவ்வொரு கிணற்றுக்கும் தலா 4 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளதாக பிரதேச செயலக திட்டமிடல் பணிப்பாளர் தெரிவித்தார்.

இதேவேளை —

இப்பிரதேச செயலகத்திற்குட்பட்ட வசதி குறைந்த 40 பேருக்கு புதிதாக மலசலகூடம் கட்டவென தலா 1? ஆயிரம் ரூபாப்படி வழங்கப்படவுள்ளதாகவும் —

மலசலகூடம் புனரமைப்புச் செய்ய வேண்டிய 50 பேருக்கு தலா 4 ஆயிரம் ரூபா வழங்கவும் யுனிசெவ் நிறுவனம் முன் வந்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்,

இதற்குத் தகுதியானவர்களின் விவரம் கிடைத்ததும் இதற்கான வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்படும்.

(ஐ-180-86)

## விறகு தறிக்கச் சென்றவர் மிதிவெடியில் சிக்கிப் பலி

தென்மராட்சி, ஜூன் 21

உறவினரின் தகனக் கிரியைக்காக விறகு தறிக்கச் சென்ற இளம் குடும்பஸ்தர் மிதிவெடியில் அகப்பட்டு பலியானார்.

கடந்த சனியன்று வரணி குடமியன் மயானத்திற்கு அருகில் உள்ள பற்றைக் காட்டில் இச்சம்பவம் இடம்பெற்றது.

குடமியனைச் சேர்ந்த சுப்பிரமணியம் சுவேந்திரன் (வயது 32) என்னும் ஐந்து பிள்ளைகளின் தந்தையே பலியானவராவார்.

பற்றைகளுக்குள் நின்ற மரத்தைத் தறிப்பதற்காகச் சென்றபோது மிதிவெடியில் அகப்பட்டதாகவும், இடது கால் பாதம் சேதமடைந்தது டன் உடல் முழுவதும்குண்டுச் சிதறல்கள் பாய்ந்ததால் அவர் பலியானதாகவும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரி திடீர் மரண விசாரணை அதிகாரி ந.தர்மேந்திரர் விசாரணை நடத்தி விபத்து மரணம் எனத் தீர்ப்பு வழங்கினார். குடமியன் கிராம அலுவலர் சந்திரபோஸ் சாட்சிகளை நெறிப்படுத்தினார் (ஐ-117)

## பொதுக் கலைமாணிப் பரீட்சை முடிவுகள்

கொழும்பு, ஜூன் 21

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் வெளிவாரிப் பரீட்சைப் பிரிவினால் 1998 ஏப்ரலில் நடத்தப்பட்ட பொதுக் கலைமாணிப் பரீட்சை முடிவுகளில் எஞ்சிய தொகுதி நாளை வெளியிடப்படவுள்ளது.

இந்த பரீட்சை முடிவுகளின் ஒரு தொகுதி ஏற்கனவே வெளியிடப்பட்டது குறிப்பிடத்தக்கது.

அரசியல் விஞ்ஞானத்தைப் பாடமாகக் கொண்ட மாணவர்களின் பெறுபேறுகளே இன்று வெளியிடப்படவுள்ளன. (இ-5-7)

## வி. கழக சம்மேளனம்

தென்மராட்சி, ஜூன் 21

பளைப் பிரதேச விளையாட்டுக்கழகங்களின் சம்மேளனம் அண்மையில் பிரதேச செயலர் சு. புத்திசிகாமணியினால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. (ஐ-117)

## மோ. சைக்கிள் அபகரிப்பு

தென்மராட்சி, ஜூன் 21

சாவகச்சேரி சந்தையில் மரக்கறி வியாபாரம் செய்யும் ஒருவரின் வீட்டுக்குச் சென்ற திருடர்கள் அங்கு நின்ற மோட்டார் சைக்கிளை அதன் உரிமையாளர் வாங்கி வருமாறு கூறியதாகக் கேட்டு அபகரித்துச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன் தினம் சாவகச்சேரி கச்சாய் வீதியில் இடம்பெற்றது.

இச்சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-117)

## கரபந்தாட்டச் சுற்றுப்போட்டி

யாழ். மாவட்ட கரபந்தாட்டச் சங்கம் 'உதயன்' நிறுவன ஆதரவுடன் நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக்கழக மைதானத்தில் நடத்தி வருகின்ற கரபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டங்களின் விவரம் வருமாறு:

பிற்பகல் 4 மணி — இந்து இளைஞர் வி.க. அணி எதிர் சிவசக்தி வி. க. அணி.

பிற்பகல் 5 மணி — விக்னேஸ்வரா வி. க. அணி எதிர் கோப்பாய் ஐக்கிய வி. க. அணி. (க-ரி)

## தென்னைச் செய்கைக் கருத்தரங்கு

கடந்த ஆண்டுகளில் தென்னை மரங்கள் பராமரிக்கப்படாமையைக் கருத்தில் கொண்டு தென்னை பராமரிப்புப் பற்றிய கருத்தரங்கும் வீடியோ படக்காட்சியும் சுன்னாகம் தெற்கு முத்தமிழ் மன்றத்தில் நடத்தப்பட்டது.

சுன்னாகம் தெற்கு விவசாய சம்மேளனத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில், தென்னை மரங்களுக்கு உண்டாகும் பாதிப்புகளும், நிவர்த்தி செய்யும் வழிமுறைகளும் வீடியோ படம் மூலம் காண்பிக்கப்பட்டது. தென்னை அபிவிருத்தி உத்தியோகஸ்தர் ஜெ. சத்தியேந்திரா விளக்கவுரை நிகழ்த்தினார்.

இப்பிரதேசவிவசாயிகளும், வீட்டுத்தோட்ட உரிமையாளர்களும் கலந்துகொண்ட இந்நிகழ்வில், உடுவில் பகுதி விவசாய போதனாசிரியர் திருமதி ஜெயலக்சுமி சிவசுப்பிரமணியம் பொதுவான விவசாய விளக்கங்களை அளித்தார்.

சம்மேளனத் தலைவர் க. தியாகலிங்கம் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது. (ஐ-27)

## தில்லைநடராஜனின் ஆனி உத்தரத்தரிசனம்; அல்லல் அறுத்துஆனந்தத்தை அள்ளித்தரவல்லது

இன்று ஆனி உத்தரமாகும். அதனை ஒட்டி இந்தக் கட்டுரை பிரசுரிக்கப் படுகிறது.

சைவப்புலவர்

**இராசையா ஸ்ரீதரன்**

இன்று ஆனி உத்தர நன்னாள். சிதம்பரத்திலே நடராஜப் பெருமானுக்கு விசேஷ அபிஷேகங்கள் அதிகாலையிலேயே நடைபெறும். அந்தக் காட்சி காணக் கிடைக்காத ஒன்று. இன்னோரன்ன பழவகைகளாலும் விபூதி சந்தனம், குங்குமம், பால் தயிர், தேன், கருப்பஞ்சாறு முதலியவற்றாலும் எம் பெருமானுக்கு அபிஷேகம். ஒவ்வொன்றாலும் தனித்தனி விசேஷமான அழகுடன் மிளிரும் இந்த அபிஷேகமானது பக்தர்கள் மனங்களில் ஆன்மீக உணர்வை ஏற்படுத்தி பக்தியுடன் கலந்த ஒரு சந்தோஷத்தின், மகிழ்ச்சியின் இன்பத்தின் இறுதி எல்லைக்கே அழைத்துச் சென்றுவிடும்.

பெருந்திரளான பக்தர்கள் இந்தக் காட்சியைக் கண்டுவிடவேண்டும் என்ற ஆவலினால் உந்தப் பெற்றவர்களாக ஒருவரோடொருவர் இடித்துக் கொண்டும் முண்டியடித்துக் கொண்டும் முன்னுக்கு இடம்பிடிக்கச் செல்வர். நடராஜப் பெருமான் புன்சிரிப்போடு சிவகாமி அம்பாள் சமேதராக பக்தர்களுக்கு அருட்காட்சி நல்குவார், அல்லல் அறுக்கவென்றே பெருமான் புறப்பட்டு விடுவார்.

''குனித்தபுருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிண் சிரிப்பும் பனித்த சடையும், பவளம் போல்மேனியிற் பால் வெண்ணீறும் இனித்தமுடைய எடுத்த பொற்பாதமும் காணப் பெற்றால் மனித்தப் பிறவியும் வேண்டுவதே இம்மாநிலத்தே'' என்றபடி சிதம்பர நடராஜப் பெருமானின் அழகுத் திருக்கோலம் காண்பதற்கு மனிதப் பிறவி நிச்சயம் வேண்டும். காணக் கண்கோடி வேண்டும். இரண்டு கண்கள் போதா.

''வாழ்த்தவாயும் நினைக்க மட நெஞ்சும் தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனை'' ஏத்தி ஏத்தித் துதிப்பதற்கும் கொடுத்து வைத்திருக்க வேண்டும். எல்லோராலும் இந்த ஆனந்த அனுபவத்தைப் பெற்றுவிடவோ கண்கொள்ளாக் காட்சியைக் கண்டுவிடவோ முடியாது. பூர்வீகப் பலன் வேண்டும்.

மண்டபம் நிறைந்த ஜனத்திரளின் நடுவே ஸ்ரீ நடராஜர் ஆனந்தத் தாண்டவம் புரிவார். முன்னுக்கும் பின்னுக்கும் போய் அக்கம் பக்கம் சரிந்து துள்ளித்துள்ளிப் பக்தர்கள் புரியும் திருவிளையாடல் மயிர்க் கூச்செறியச் செய்யும் திறன் வாய்ந்தது. அருமையிலும் அருமையான அழகுத் திருக்கோலம் அது.

''தில்லை நடராஜன் தரிசனமே, உலகில் தேடக் கிடைக்காத தரிசனமே'' என்ற பாடல் இதன் உண்மையை உணர்த்தி நிற்கின்றது. ''அவனருளாலே அவன் றாள் வணங்கி'' என்று மாணிக்கவாசகர் கூறியது போல இந்தத் தெய்வீகத் திருக்கோலக் காட்சி காண்பதற்கும் அவனருள் வேண்டும் இதனைச் சிதம்பரத்திலே கண்டு களித்த அன்பர்களுக்குத் தான் அந்த உண்மையான பக்திப் பிரவாகத்தின் பயன் தெரியும். தம்மை மறந்த நிலை அது.

தில்லை நடராஜனின் ஆனி உத்தரத் தரிசனம்; எமது அல்லல் அறுத்து ஆனந்தத்தை அள்ளித்தர வல்லது. அடியவர் உள்ளத்திலே அழியாத இடம் பெற்று நிறைந்திருக்கும்.

ஈழத்திலே நல்லூர் சிவன் கோயிலிலும் ஈழத்துச் சிதம்பரம் என அழைக்கப்படும் காரைநகர்சிவன் கோயிலிலும் இந்தக் காட்சியைக்கண்டு அனுபவிக்கலாம். ஆனி உத்தரம் சிவனுக்குரிய நன்னாளாகும். இந்த நன்னாளில் சைவ மக்கள் ஒவ்வொருவரும் விரதம் இருந்து சிவசிந்தனையுடன் தேவார பாராயணம் செய்து விருந்தோம்பல் செய்து எம்பெருமானை வழிபட வேண்டும். அதனால் பிறவிப் பிணி தீரும்.

இந்த ஆனி உத்தர விரதத்தை அனுட்டித்தால் புத்திர சந்தானம் வாய்க்கப் பெற்று — சகல சௌபாக்கியங்களும் பெற்று — பூவுலகில் சிறந்து வாழலாம் என்பது ஆன்றோர் நம்பிக்கை.

ஆகவே ஸ்ரீ நடராஜப் பெருமானின் தரிசனத்தை நாம் மனக்கண்ணால் ஆவது கண்டு களித்து சதுர்வித பல புருஷார்த்தங்களையும் பெற்றுய்வோமாக.

★

### நாளை

ஆனி 8

செவ்வாய்க்கிழமை

திதி: நவமி

மாலை 5.23 வரை

நட்சத்திரம்: அத்தம்

பிற்பகல்: 2.51 வரை.

சுபநேரம்: 10.24—11.54

ராகுகாலம்: 2.54 — 4.24

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

### உதயவாக்கு

மனிதன் நிமிர்ந்து நிற்க வேண்டும்; மற்றவர்களால் அவன் நிமிர்த்தி வைக்கப் படும் நிலையில் இருக்கக் கூடாது.

— [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டுறவுச் சங்க முகாமையாளர் பதவிக்கு பட்டதாரிகள் நியமனம்

## விரைவில் திட்டம் அமுலாக்கு

யாழ்ப்பாணம், ஜூன் 21

வடக்கு — கிழக்கு மாகாணத்தில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள பொது முகாமையாளர்களுக்குரிய நியமனங்கள் பட்டதாரி பயிற்சித் திட்டத்தின் கீழ் ஒரு தொகுதி பட்டதாரிகளுக்கு வழங்கப்பட உள்ளதாகத் தெரியவருகிறது.

இதற்கான ஏற்பாடுகளை திருகோணமலையில் உள்ள வடக்கு — கிழக்கு மாகாண கூட்டுறவுத் திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது.

கூட்டுறவுச் சங்கங்களில் நியமனம் பெறும் பட்டதாரி பயிலுநர்களுக்கு முதலில் பொது முகாமைத்துவப் பயிற்சி அளிக்கப்படும்.

நியமனம் பெறும் பட்டதாரிகளுக்கு கூட்டுறவுச் சங்கத்தின் சம்பளத் திட்ட அடிப்படையில் மாதாந்தக் கொடுப்பனவு வழங்கப்படும்.

கூட்டுறவுச் சம்பளத்திட்டத்தில் பொது முகாமையாளர்களுக்கான கொடுப்பனவு குறைவாக இருப்பதனால் சம்பளத் திட்டத்தை மாற்றியமைக்கவும் ஆலோசிக்கப்பட்டு வருவதாகவும் தெரிய வருகின்றது. (ஐ-17)

# 125 ஆவது ஆண்டு நிறைவு விழா

கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்தின் 125 ஆவது ஆண்டு நிறைவு வைபவ முதல் நாள் நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமை காலை 9-00 மணிக்கு அதிபர் சி. ஆ. சோதிலிங்கம் தலைமையில் நடைபெறும்.

முதல் நிகழ்வாக அருகிலுள்ள கொழும்புத்துறை மன்னுமாடு ஸ்ரீ விநாயகர் ஆலயத்தில் விசேட அபிஷேகம், பூசை வழிபாடு நடைபெறும். பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளும் யாழ். மாநகர சபை ஆணையாளர் பொ. பாலசிங்கம் தவயோகி யோகர் சுவாமிகள் சிலையைச் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைப்பார்.

அத்துடன் கணனி அறையை யாழ். கோட்டக் கல்வி அதிகாரி தா. அருளானந்தம் மங்கள விளக்கேற்றிச் சம்பிரதாயபூர்வமாக திறந்து வைப்பார்.

சமயப் பெரியார்கள். கல்வி சார் அறிஞர்கள் ஆசியுரை வழங்குவர். மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும். (ஐ-30-111)

# துண்டி பொது மயானம் பராமரிப்பற்ற நிலையில்

கொழும்புத்துறை துண்டி இந்துமயானம் போதிய வசதிகள் இன்றி காணப்படுவதாக பாவனையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

மயானம் புனரமைக்கப்படாததினால் சடலங்களைத் தகனம் செய்ய வருவோர் பெரும் சிரமப்பட்டுவருகின்றனர்.

அத்துடன் மயானத்தில் இருக்கும் கிணறு, மடம் என்பன சேதமுற்றுக் காணப்படுகின்றன.

இராணுவத்தின் அனுமதி பெற்றே இங்கு சடலங்களை தகனம் செய்ய முடியும். (ஐ-17)

# தமிழ்ச்சங்கத்தின் பாவனைக்குக் கட்டடம்

வட்டுக்கோட்டைத் தொகுதித் தமிழ்ச் சங்கத்தினரால் நடத்தப்படவிருக்கும் பண்டிதர் வகுப்புக்களை நடத்துவதற்கான புதிய கட்டடம் ஒன்றை அமைக்க ஈ. பி, டி. பியினர் நடவடிக்கை எடுத்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி சங்கத்தினர் விடுத்துள்ள வேண்டுகோளை அடுத்து ஈ, பி. டி. பியின் யாழ். மாவட்ட பொறுப்பாளர் வி. கே. ஜெகன், வலிமேற்கு பிரதேச சபைத் தலைவர் ந. திரிலோகநாதன் ஆகியோர் இது தொடர்பான ஆரம்பகட்ட நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-7)

## ஆயுர்வேத ஆஸ்பத்திரிக்கு

# நிரந்தர வைத்திய அதிகாரியை நியமிப்பதாக உறுதிமொழி

வேலணை, ஜூன் 21

வேலணை பிரதேச சபையின் நயினாதீவு உபஅலுவலகப் பிரிவின் கீழ் இயங்கும் இலவச சித்த ஆயுர்வேத வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்திய அதிகாரி ஒருவரினை உடன்நியமிக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுப்பதாக வடக்கு — கிழக்கு மாகாண சுதேச மருத்துவப் பணிப்பாளர் சு. பவானி தெரிவித்துள்ளார்.

அண்மையில் புங்குடுதீவில் இயங்கும் இலவச சித்த ஆயுர்வேத வைத்தியசாலைக்கு சு. பவானி விஜயத்தினை மேற்கொண்ட போது அங்கு கடமையாற்றும் ஆயுர்வேத வைத்திய அதிகாரியும், சித்த ஆயுர்வேத அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் இணைச் செயலாளருமான பொ. சண்முகரெத்தினம் நயினாதீவு சித்த ஆயுர்வேத வைத்தியசாலைக்கு வைத்திய அதிகாரியை நியமிக்க வேண்டியதன் அவசியத்தினையும், வைத்திய அதிகாரி இன்றி பொதுமக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றியும் நேரில் எடுத்துக் கூறினார்.

புங்குடுதீவு மற்றும் சங்கானை, ஏழாலை, நீர்வேலி, பச்சிலைப்பள்ளி, கரைச்சி ஆகிய பிரதேசங்களில் இயங்கும் ஆயுர்வேத வைத்தியசாலைகளுக்கும் வைத்திய அதிகாரிகளை நியமிக்க, தான் கொழும்பு சென்றவுடன் ஆயுர்வேத ஆணையாளர், உள்ளூராட்சி ஆணையாளர் ஆகியோருடன் தொடர்பு கொண்டு நடவடிக்கைகள் எடுப்பதாக அவர் உறுதி அளித்ததுடன் ஆயுர்வேத வைத்தியசாலைகளில் கடமையாற்றும் ஆயுர்வேத மருந்துக் கலவைபாளர்களின் நியாயமான கோரிக்கைகளை நிவர்த்தி செய்யும் பொருட்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொள்வதாகவும் அவர் மேலும்தெரிவித்தார். (ஐ-167

# மேலும் 828 குடும்பங்களுக்கு 5,000 ரூபா கொடுப்பனவு

வலி. கிழக்கு, ஜூன் 21

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் மீள்குடியமர்வுக் கொடுப்பனவான 5 ஆயிரம் ரூபா மேலும் 828 குடும்பங்களுக்கு வழங்கப்பட உள்ளது. இதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டு வருகின்றன.

595 நிரந்தரக் குடும்பங்களுக்கும், இடம்பெயர்ந்து இப்பிரதேச செயலர் பிரிவில் வசிக்கும் 233 குடும்பங்களுக்குமே இக்கொடுப்பனவு வழங்கப்படவுள்ளதாக பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இவர்களின் கொடுப்பனவுகள் அவரவரது வங்கிப் புத்தகங்களுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவ் வட்டாரங்கள் தெரிவித்தன.

# உள்ளூர் குளிர்பானங்கள் கூ. சங்கங்களில் விற்பனை

அரியாலை ஜூன் 21

யாழ் மாவட்ட விவசாய உற்பத்தி, கூட்டுறவுச் சமாசம் உள்ளூரில் தயாரிக்கப்படும் மென்பானங்களைக் கொள்வனவு செய்து பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கி வருகின்றது.

உள்ளூர் உற்பத்தியை ஊக்குவிக்கும் பொருட்டு சமாசம் பரீட்சார்த்தமாக ஒரு தொகுதி உள்ளூர் குளிர்பானங்களைக் கொள்வனவு செய்து கூட்டுறவுச் சங்கங்களுக்கு விநியோகிப்பதாக சமாசத் தலைவர் தெரிவித்தார்.

இந்த முயற்சி வெற்றியளிக்கும் பட்சத்தில் மேலும் உள்ளூர் குளிர்பானங்கள் கொள்வனவு செய்யப்பட்டு தேவைப்படும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-17)

# மாதகலில் ஒரு பகுதிக்கு மின்சாரம் கிடைத்தது

மாதகல் தபாற் கந்தோரடி பகுதிக்கு 25 கே. வி. ஏ வலுவுள்ள ஜெனரேற்றர் மூலம் மின்சார விநியோகம் வழங்கப்பட்டுள்ளது. கடந்த 14 ஆம் திகதி இலங்கை மின்சார சபையின் யாழ். பிரதேச பொறியியலாளர் சி. வல்லிபுரம் இந்த மின் விநியோகத்தை வைபவரீதியாக ஆரம்பித்து வைத்தார்,

அவர் அங்கு உரையாற்றுகையில் —

ஜெனரேற்றர்களும், மின்சார உபகரணங்களும் கொழும்பிலிருந்து வந்தவுடன் ஏனைய பகுதிகளுக்கும் படிப்படியாக மின் விநியோகம் மேற்கொள்ளப்படவிருப்பதாக தெரிவித்தார்.

மின் அத்தியட்சகர் அ. நாகராசாவும் இதில் கலந்து கொண்டு உரையாற்றினார். (ஐ-135)

# வலி. கல்வி வலயத்தில் 3 கோட்டங்கள் அமைப்பு

வலிகாமம்தெற்கு, ஜூன் 21

வலிகாமம் கல்வி வலயத்தின் கோட்ட ரீதியான செயற்பாடுகள் ஜூலை மாதம் முதல் ஆரம்பமாக இருப்பதாகத் தெரியவருகின்றது.

வலிகாமம் கல்விவலயத்தில் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு உதவிக்கல்விப் பணிப்பாளர்களின் பொறுப்பில் விடப்பட்ட பாடசாலைகள் யாவும் மீண்டும் முன்னைய கோட்டங்களில் அமைந்திருந்தது போல நான்கு கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டு பொறுப்புக்கள் வழங்கப்பட உள்ளன.

பிரிவு ஒன்று, இரண்டு, மூன்று என வழங்கப்பட்டு வந்த நிலை மாறி வலிகாமம் வலயத்தில் நான்கு கோட்டங்கள் அமைய உள்ளன.

தெல்லிப்பழை, உடுவில், சங்கானை, சண்டிலிப்பாய் என இந் நான்கு கோட்டங்களும் அழைக்கப்படும்.

சண்டிலிப்பாய் கோட்டத்துக்குப் பொறுப்பாக காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி அதிபர் க. தனபாலசிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார்.

சண்டிலிப்பாய் கோட்டச் செயற்பாடுகள் எதிர்வரும் வெள்ளிக்கிழமை ஆரம்பமாக உள்ளன.

மானிப்பாய் இந்துக் கல்லூரியில் சண்டிலிப்பாய் கோட்டத்துக்கான அலுவலகத்தை வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் வீ. இராசையா அன்றையதினம் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்க உள்ளார்.

சங்கானைக் கோட்டத்துக்கான அலுவலகம் உதவிக் கல்விப்பணிப்பாளர் சி. செல்லையா தலைமையில் சித்தங்கேணி ஸ்ரீ கணேசாவித்தியாலயத்தில் அமையும்.

அதேபோன்று தெல்லிப்பழைக் கோட்டத்துக்கான அலுவலகம் மல்லாகம் விசாலாட்சி வித்தியாலயத்தில் உதவிக்கல்விப் பணிப்பாளர் ஆ. வி. கணேசலிங்கம் தலைமையில் இயங்கும்.

உடுவில் கல்விக்கோட்டத்துக்கான அலுவலகம் இணுவில் மத்திய கல்லூரியில் அமைக்கப்படும். உதவிக் கல்விப் பணிப்பாளர் அ. தற்பரானந்தன் இக் கோட்டத்துக்குப் பொறுப்பாக இருப்பார்.

ஒவ்வொரு கோட்டத்திலும் கடமையாற்றுவதற்கான ஆளணியினர் விரைவில் நியமிக்கப்பட உள்ளனர். (ஐ-152)

# பனை,தென்னை வளகூ.சங்கங்களை கிராமிய வங்கி சமாசத்தில் சேர்க்குக

## கூட்டுறவு ஆணையாளர் ஆலோசனை

அரியாலை, ஜூன் 21

யாழ். மாவட்டத்தில் உள்ள பனை, தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களையும் கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் சமாசத்தில்இணைத்துக் கொள்ளுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வடக்கு—கிழக்கு மாகாண கூட்டுறவு ஆக்க ஆணையாளர் கே. சண்முகலிங்கம் கிராமிய வங்கிகளின் சமாசத் தலைவர் சீ. வீ. கே. சிவஞானத்திற்கு இது தொடர்பான கடிதம்ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் கிராமிய வங்கிகளைக் கொண்டிராத காரணத்தினால் கிராமிய வங்கியின் சமாசத்தில் அவர்கள் உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

மேற்படி சங்கங்களை சமாசத்தில் சேர்த்துக்கொள்வதற்கு சமாசத்தின் துணை விதியில் திருத்தங்களைக் [illegible] ஆணையாளர் தனது கடிதத்தில் ஆலோசனை வழங்கியுள்ளார். (ஐ-17)

# சுகாதாரச் சீர்கேட்டினால் பேக்கறி மூடப்பட்டது

திருநெல்வேலி, ஜூன் 21

சுன்னாகம் பலநோக்கு கூட்டுறவு சங்கம் இணுவிலில் நடத்தி வரும் பாண் பேக்கறியில் நிலவும் சுகாதார சீர்கேடுகள் நிவர்த்தி செய்யப்படும் வரை பாண் தயாரிப்பு வேலைகளை நிறுத்தி வைக்கும் படி தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் பொறுப்பதிகாரி உத்தரவிட்டுள்ளார்.

அண்மையில் இணுவிலிலுள்ள இந்த பேக்கறிக்குச் சென்று திடீர்ப் பரிசோதனை மேற்கொண்ட தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் பொறுப்பதிகாரி அங்கு சுகாதார விதிகளுக்கு முரண்பட்டவிதத்தில் செயற்பாடுகள் இருந்து வருவதை அவதானித்து அவற்றைச் சீர் செய்யுமாறு பணிப் புரை வழங்கியிருந்தார்.

குறிப்பிட்ட கால எல்லைக்குள் அவை சீர்செய்யப்படாததால் சீர் செய்யும் வரை பேக்கறியில் பாண் உற்பத்தியைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்குமாறு பணிப் புரை விடுக்கப்பட்டுள்ளது.

இதனை அடுத்து இந்த பேக்கறியில் பாண் [illegible] தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-135)

# மின் விநியோகம் விஸ்தரிப்பு

நெடுந்தீவு, ஜூன் 21

நெடுந்தீவில் மின் விநியோகச் சேவை மேற்குப் பகுதிக்கும் விஸ்தரிக்கப்படவுள்ளது.

இதற்கென 250 கிலோ வோல்ட் சக்திகொண்ட மின் பிறப்பாக்கி ஒன்று நெடுந்தீவு மின்சார நிலயத்திற்கு வழங்கப்படவுள்ளதாக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார். (ஐ-111)

# கிளாலியில் ஒதுங்கிய சடலம்

தென்மராட்சி ஜூன் 21

கடந்த செவ்வாய்க்கிழமை கிளாலிக் கடலில் கரை ஒதுங்கிய 30 வயது மதிக்கத்தக்க ஆணின் சடலம் பளைப் பொலீஸாரால் கடந்த புதன் கிழமை யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

சடலத்தின் காது, மூக்கு ஆகிய பகுதிகளிலிருந்து இரத்தம் வெளியேறிக்கொண்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ 117)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் ஒரு கறுப்பு ஜூலையை உருவாக்கும் முயற்சியின் பின்னால் முதலாளித்துவ சக்திகள்

## மக்கள் விடுதலை முன்னணி அறிக்கை

கொழும்பு, ஜூன் 21

1983 ஆம் ஆண்டு ஏற்பட்ட கறுப்பு ஜூலை வன்முறையின் தாக்கத்தில் இருந்து எமது நாடு இன்னும் மீட்சி பெறவில்லை. இதற்குள் மற்றுமொரு மோசமான கறுப்புஜூலைக் கலவரத்தை நாட்டில் ஏற்படுத்த முயற்சிக்கும் இனவாதக் குழுக்களின் பின்னால் முதலாளித்துவ அரசியல்வாதிகள் செயற்படுகின்றனர்.

இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் அரசியல் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த கால இனவாத செயற்பாடுகளின் மூலம்வேறுபட்டிருக்கும் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் மத்தியில் மீண்டும் ஐக்கியத்தையும் நம்பிக்கையையும் ஏற்படுத்துவதற்குப் பதிலாக இன்னொரு இனவாத மோதலுக்குள் தமிழ், சிங்கள மக்களைத் தள்ளிவிடும் முயற்சியில் பயங்கரவாதத்துக்கு எதிரான தேசிய இயக்கம் என்ற பெயரில் செயற்படும் சிங்கள இனவாத இயக்கம் ஈடுபடுகின்றது. இது நாட்டுக்குப் பேரழிவை ஏற்படுத்தக் கூடிய முயற்சி.

பயங்கரவாதத்துக்கு எதிராகச் செயற்படுவதாகக்கூறி சிங்கள இனவாதத்தை ஊக்குவிக்கும் குழுக்கள் போலவே தமிழ் இனவாதத்தைத் தோற்றுவிக்க முயலும் தமிழ்க் குழுக்களும் பரஸ்பர எதிர் நடவடிக்கைகளில் இறங்கியுள்ளன.

தமிழ் இனவாதத்தைத் தூண்டவும் அதனைப் பலம் பெறச் செய்யவும் மட்டுமே சிங்கள இனவாதத்தால் முடியும். அதேபோன்று சிங்கள இனவாதத்தைத் தூண்டவும் அதனைப் பலம் பெறச்செய்யவும் மட்டுமே தமிழ் இனவாதத்தால் முடியும்.

மக்கள் மத்தியில் உண்மையான சமாதானத்தை ஏற்படுத்தவோ நாட்டின் பிரச்சினைகளைத் தீர்க்கவோ எந்த இனவாத அமைப்பினாலும் முடியாது என்பதைக் கடந்தகால வரலாறு நிரூபித்துள்ளது.

மக்கள் மத்தியில் இனக் கலவரத்தைத் தூண்டிவிட்டு அவர்களை மோதவைத்துத் தமது குறுகிய அரசியல் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள முயற்சிக்கும் முதலாளித்துவ அரசியல் கட்சிகள் மற்றும் வெளிநாட்டு உளவுச் சேவையில் ஈடுபடும் அமைப்புகள் அனைத்தையும் தோல்வியுறச்செய்ய மக்கள் தயாராக வேண்டும்.

எனவே சொந்த நலன் கருதிச் செயற்படும் இந்த இனவாதக் குழுக்களிடம் மக்கள் ஏமாந்துவிடக் கூடாது. இனவாதத்தால் நாட்டில் ஏற்படக் கூடிய பேரழிவை மக்கள் உணர்ந்து செயற்பட வேண்டும்—

இவ்வாறு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## நாடக விழா

தென்மராட்சி, ஜூன் 21

பளை கலை கலாசாரப் பேரவையின் நாடக விழா எதிர்வரும் 29 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரவு 7 மணிக்கு புலோப்பளை புனித இராயப்பர் தேவாலய கலையரங்கில் நடைபெறும்.

நாடக விழாவில் பளைப் பிரதேசத்தைச் சேர்ந்த கலைஞர்களின் ஏழு நாடகங்கள் மேடையேற்றப்படவுள்ளதாக பிரதேச செயலர் சு. புத்திசிகாமணி தெரிவித்தார்.

பளை கலை கலாசாரப் பேரவையின் நிதிக்காக பரிசுச் சீட்டிழுப்பும் அன்றைய தினம் நடைபெறும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

# ஜனாதிபதித் தேர்தலில் அறுவர் போட்டியிடலாம்

கொழும்பு, ஜூன் 21

எதிர்வரும் டிசெம்பரில் நடக்கும் என எதிர்பார்க்கப்பட்டுவரும் ஜனாதிபதித் தேர்தலில் ஆறு முனைப் போட்டி இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி சார்பில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் —

ஐ.தே.க. சார்பில் ரணில் விக்கிரமசிங்கவும் —

ஜே.வி.பி. சார்பில் அதன் தலைவர் சோமவங்க சமரசிங்கவும் —

பொது அமைப்புக்களின் சார்பில் வாசுதேவ நாணயக்காராவும் —

தமிழ் காங்கிரஸ் கட்சித் தலைவர் குமார் பொன்னம்பலமும் —

மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் தினேஷ் குணவர்த்தனாவும் — போட்டியிடுவர் எனத் தெரிவிக்கப்பட்டது.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் வரவு — செலவுத் திட்டம் நவம்பரில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் ஜனாதிபதித் தேர்தலை நடத்த ஏற்பாடு செய்யப்படுவதாகவும் —

அரசு முன்வைத்துள்ள அரசமைப்புச் சீர்திருத்தத்துக்கு பொதுமக்களின் விருப்பைப் பெறும் சர்வஜன வாக்கெடுப்பாகவும் இந்தத் தேர்தல் நடத்தப்பட விருப்பதாகவும் — அரச உயர் வட்டாரங்கள் தெரிவித்தன.

(இ-3-8)

# மன்னாரில் தாக்குதல் நடத்த புலிகள் திட்டம்

## இராணுவ உளவுப் பிரிவு தகவல்

கொழும்பு, ஜூன் 21

மன்னாரில் தாக்குதல் நடத்த விடுதலைப் புலிகள் திட்டமிட்டுள்ளனர் என்று இராணுவ உளவுப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்தத் தகவலைத் தொடர்ந்து மன்னாரில்படையினர் திடீர் தேடுதலைநடத்தினர் என்றும்—

இந்த தேடுதலின் போது சந்தேகத்தின் பேரில் 20 பேர் கைது செய்யப்பட்டனர் என்றும் — மேலும் தெரிவிக்கப்பட்டது.

தேடுதலின் போது அதி சக்தி வாய்ந்த பத்துக் குண்டுகளும், குறித்த நேரத்தில் குண்டுகளை வெடிக்க வைக்கும் உபகரணங்களும் கைப்பற்றப்பட்டன என்று படைத்தரப்பு கூறியது.

மன்னார்ப் பகுதியில் சிவில் நிர்வாகத்தைக் குழப்புவதற்காக தாக்குதல் நடவடிக்கைகளை விடுதலைப் புலிகள் மேற்கொள்ள திட்டமிடுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## நிவாரணம்

கொழும்புத்துறை, ஜூன் 21

இடம் பெயர்ந்தோருக்கான 75 ஏ-பி புள்ளிகளுக்குரிய நிவாரணப் பொருள்கள் கடந்த 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முதல் சகல பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளிலும் வழங்கப்பட்டு வருகின்றன.

இம் மாதம் 26 ஆம் திகதி வரை நிவாரணம் வழங்கப்படவுள்ளதாக கிளை முகாமையாளர் ஒருவர் தெரிவித்தார்.

(இ-30)

# மன்னார் மக்கள் அவதி

வவுனியா, ஜூன் 21

''மாலை 6 மணிக்குள் நாம் எல்லோரும் வீடுகளில் முடங்கி விடுகின்றோம். இளவயதினரை வீதிக்கு விடப் பயமாக இருக்கிறது.''

இவ்வாறு மன்னாரில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் சிக்கியுள்ள பொது மக்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தப் பகுதிக்கு அண்மையில் விஜயம் செய்த செய்தியாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

இராணுவம் எங்கும் நிலைகொண்டுள்ளது. அதனால் தாம் எந்த நேரமும் அச்சத்துடன் வாழ்வதாக அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

## தொழில் வாய்ப்பு...

[3 ஆம் பக்கத் தொடர்]

கள் அமைகின்றன,

மாணவர்களின் சிந்தனைகள் வகுப்பறை என்ற குறுகிய வட்டத்தில் இருந்து விடுபட்டு அவர்களின் சிந்தனைகளை ஆக்கபூர்வமாக வெளியிட திசை முகப்படுத்த வேண்டிய சந்தர்ப்பம் ஏற்படுகின்றது

காலஓட்டத்தில்அவர்களின் எண்ணங்கள் சிந்தனைகள் அழிந்து போகாமல் இருக்க செயல்திறன் அவசியமாகின்றது. அச்செயல் திறனின் பிரதிபலிப்புத்தான் இவ்வாறான சஞ்சிகைகளின் வெளியீடாகும்.

கற்றல், கற்பித்தலுடன் அவர்கள் நில்லாது புத்தாக்கங்களை ஏற்படுத்தவும் இவ்வாறான மலர் வெளியீடுகள் பெரும் துணைபுரிகின்றன.

விஞ்ஞானம், கலை ஆகிய துறைகளில் மட்டும் ஆர்வங் காட்டிய மாணவர்கள் வணிகத்துறையில் நாட்டம் கொள்வதற்கு இரண்டு நோக்கங்கள் காரணமாகின.

ஒன்று — ஆகக்கூடிய வெட்டுப்புள்ளியைப் பெற்று பல்கலைக்கழக கல்வியைப் பெறுவது,

மற்றையது—பல்கலைக்கழக அனுமதி கிடைக்காத போதிலும் பல மாற்று வழிகளைப்பயன்படுத்திவாழ்க்கை வசதிகள், வேலைவாய்ப்புகளைப்பெற்றுக்கொள்வது.

ஐ.சி.எம்.ஏ., பட்டயக் கணக்காளர் போன்ற கல்வியைத்தொடரவும் புறநிலையாகத் தோன்றி பல்கலைக்கழகப் பட்டத்தைப் பெறவும் உயர்தொழில் நுட்ப நிறுவனத்தில் பயிற்சிகளை மேற்கொள்ளவும் முடியும்.

யாழ்ப்பாணத்தில் 20க்கு மேற்பட்ட கல்லூரிகள் வணிகம் சம்பந்தமான நூல்களை வெளியிடுகின்றன.

வணிக் கல்வியானது பயிற்சியுடன் ஆளுமை, தலைமைத்துவம் போன்ற பண்புகளை பெறச் செய்வதால் தொழில் வாய்ப்புகளைப் பெற்றுக் கொள்ள உதவியாக அமைகிறது— என்று கூறினார்.

வலிகாமம் வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் வாழ்த்துரை வழங்குகையில் —

எமது பிரதேசம் ஒரு சீரான நிலைக்கு வராதநிலையிலும் மாணவர்கள் ஆர்வம் குன்றாமல் தமது கல்வித் தேடலை நிறைவு செய்துவருகின்றனர். பலதுறைகளிலும் பல வெற்றிகளை வென்றெடுத்து வருகின்றனர்.

தாம் கற்கும் பாடசாலைகளின் பெருமைகளையும் தமது எண்ணங்களையும் மலர்களினூடாக வெளிப்படுத்துகின்றனர். அவர்கள் பொதுப் பரீட்சைகளுக்குத் தோற்றுவதை மட்டும் நோக்காகக் கொள்ளாது இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் முன்னின்று உழைப்பவர்களாக விளங்கவேண்டும்.

மாணவர்கள் தமது உள்ள வெளிப்பாட்டையும் அறிவு வெளிப்பாட்டையும் வெளிக்கொணரவும், கல்வித் தேடல்களை வெளியிடவும் இத்தகைய மலர் வெளியீடுகள் உதவுகின்றன — என்று கூறினார்.

நூல் வெளியீட்டுரையை நிகழ்த்திய கல்வியாளர் சி. சிவசரவணபவன் (சிற்பி) —

பிள்ளைகளைத் தானாக இயங்கவிட்டு அவர்களின் ஆற்றலைக் கணிப்பீடு செய்யும் இன்றைய கல்வி முறைக்கு இந்நூல் வெளியீடு பொருத்தமாக அமைகின்றது. ஆசிரியர் ஆசிரியரையோ, ஆசிரியர் அதிபரையோ, அதிபர் அதிகாரிகளையோ மதிப்பதில்லை என்ற இன்றைய நிலையில் மறைந்த கல்வி நிர்வாகி ஒருவருக்கு மாணவர் மதிப்பளித்திருப்பது அனைவரும் பின்பற்ற வேண்டிய ஒன்றாகும்— என்று கூறினார்.

நூல் மதிப்பீட்டுரையினை யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் ஆர். இரத்தினம் நிகழ்த்தினார்.

உதவிக்கல்விப்பணிப்பாளர் அ. தற்பரானந்தன், அதிபர் க.சிவாஜி, ஆசிரியர் ஆறுதிருமுருகன் ஆகியோரும் உரையாற்றினர்.

(ஐ-152)

# பாடசாலைக் கிரிக்கெட் அரை இறுதிக் கட்டத்தில்

யாழ்ப்பாணம், ஜூன் 21

யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் யாழ்ப்பாண கொமர்ஷல் வங்கியின் ஆதரவுடன் 15,17 வயதுக்குஉட்பட்ட பிரிவுப்பாடசாலை அணிகளுக்கிடையில் நடத்தி வந்த கிரிக்கெட் சுற்றுப் போட்டி அரை இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளது.

இந்தச் சுற்றுப் போட்டியில் இதுவரை நடந்த ஆட்டங்களின்படி ஒவ்வொரு பாடசாலை அணிகளும் பெற்றுள்ள புள்ளிகளின் விவரம் வருமாறு:-

15 வயது 'ஏ' பிரிவு

| | |
|---|---|
| ★ யாழ். இந்து | — 27.43 |
| ★ யாழ். சென்றல் | — 27.35 |
| ★ ஹாட்லி | — 26.17 |
| ★ ஸ்கந்தா | — 14.17 |
| ★ யாழ்ப்பாணக் கல்லூரி | — 08 91 |

'பி' பிரிவு

| | |
|---|---|
| ★ சென். பற்றிக்ஸ் | — 50.15 |
| ★ கொக்குவில் இந்து | — 43.31 |
| ★ சென். ஜோன்ஸ் | — 41.97 |
| ★ மானிப்பாய் இந்து | — 21.44 |
| ★ யூனியன் கல்லூரி | — 16.22 |
| ★ சாவகச்சேரி இந்து | — 9.49 |

இந்தப் பிரிவில் அரை இறுதி ஆட்டங்களில் யாழ். இந்துவை எதிர்த்து கொக்குவில் இந்துவும், சென். பற்றிக்ஸ் கல்லூரியை எதிர்த்து யாழ். மத்திய கல்லூரியும் மோதவுள்ளன.

17 வயது 'ஏ' பிரிவு

| | |
|---|---|
| ★ யாழ். இந்து | — 32.77 |
| ★ சென்.பற்றிக்ஸ் | — 28.72 |
| ★ மானிப்பாய்இந்து | — 27.16 |
| ★ ஹாட்லி | — 16.05 |
| ★ ஸ்ரான்லி | — 09.69 |

'பி' பிரிவு

| | |
|---|---|
| ★ யாழ். சென்ரல் | — 29.21 |
| ★ சென். ஜோன்ஸ் | — 28.11 |
| ★ கொக்குவில் இந்து | — 27.82 |
| ★ யூனியன் | — 15.67 |
| ★ யாழ்ப்பாணக் கல்லூரி | — 10.16 |

இந்தப் பிரிவில் அரைஇறுதி ஆட்டங்களில் யாழ் இந்துவை எதிர்த்து சென். ஜோன்ஸ் கல்லூரியும், யாழ். சென்ரலை எதிர்த்து சென். பற்றிக்ஸும் மோதவுள்ளன.

(இ-3)

# இராணுவத் தோல்விகளை ஒப்புக்கொள்வதற்கு இலங்கை அரசாங்கம் மறுக்கிறது

## டென்மார்க் அரசியல் ஆய்வாளர் கருத்து

கொழும்பு, ஜூன் 21

இலங்கை அரசு இராணுவ தோல்விகளை ஒப்புக்கொள்ள மறுக்கின்றது என்று டென்மார்க்கிலிருந்து வெளிவரும் ''பொலிக்ரிக்கல்'' சஞ்சிகையின் ஆய்வாளர் மேபொல்சன் தெரிவித்துள்ளார்.

தமது கட்டுரையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இராணுவத் தோல்விகளை ஒப்புக்கொள்ள மறுக்கும் அரசு அதற்குப் பதிலாக வடக்கில் புதிய உத்திகளைக் கையாண்டு ஒரு புதிய போர் முனையை திறப்பது பற்றியே பேசுகின்றது.

சில குறுகிய பிரதேசங்களைப் பிடிப்பதே இராணுவத்தின் தற்போதைய திட்டம் ஆகும்.

இலங்கையில் தமிழருக்கு ஒரு சுதந்திர தாயகத்தைப் பெற்றுக் கொடுப்பதற்தாகவே விடுதலைப் புலிகள் போராடுகின்றனர்.

15 ஆண்டுகளாக நிகழ்ந்து வரும் போரில் 65 ஆயிரத்துக்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர். இரண்டு லட்சம் தமிழர்கள் இலங்கையை விட்டு வெளியேறியுள்ளனர். 18 லட்சம் தமிழர்கள் உள்நாட்டிலேயே அகதிகளாகியுள்ளனர்.

இப்படி அவர் தெரிவித்துள்ளார்.

(இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இனப்பிரச்சினைத் ...

(முதலாம் பக்கத் தொடர்)

விடயமாகத் தெளிவான சமிக்ஞை புலிகளிடம் இருந்து கிடைக்கவில்லை என்று அவர் கருத்து வெளியிட்டார்.

இலங்கை விஜயத்தின் பலாபலன் குறித்து தமது கட்சித் தலைமைப் பீடத்துக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்போவதாகவும் அவர் தெரிவித்தார்.

## மானிப்பாயில்...

[முதலாம் பக்கத் தொடர்]

கோயிலுக்கு சமீபமாக இவரது வீட்டுக்கு சிறிது தூரத்தில் இவரது சடலம் நேற்று மாலை கண்டு பிடிக்கப்பட்டது.

இவர் தனது வீட்டில் தனிமையாக வசித்து வந்தார் என்றும் —

இவரது சடலத்தில் அடிகாயங்கள் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ-90)

## செம்மணி...

(முதலாம் பக்கத் தொடர்)

முதல்வர் ஏன். ஸ்ரீகாந்தா ஆகியோர் மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டுள்ளனர்.

''தமிழ் மக்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தும்விதத்தில் செம்மணிப் புதை குழியுடன் தொடர்புடைய படையினர் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டுத் தண்டிக்கப்பட வேண்டும் என்று ஜனாதிபதியிடம் கோரவிருப்பதாக டக்ளஸ் வேதானந்தா தெரிவித்தார்.

அதேசமயம் செம்மணிப் புதைகுழிகள் தொடர்பாக யாழ். நீதிமன்றில் கடந்த புதனன்று சோமரத்ன ராஜபக்ஷ அளித்த வாக்கு மூலத்தில் தெரிவித்த படை அதிகாரிகளை கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களம் இராணுவத் தலைமைப் பீடத்துக்கு அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளதாக நீதித்துறை வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

குறிப்பிடப்பட்ட படையினரில் சிலர் இன்னும் வடக்கில் பணிபுரிவதாகவும் —

இராணுவப் பொலீஸார் மூலம் அவர்களைக் கைது செய்து குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரிக்கவுள்ளதாகவும் — தெரிவிக்கப்பட்டது. (இ-3-8-164)


எமது ஓடியோ CD வெளியீடுகள்!

★ காக்கைச் சிறகினிலே

★ ஒருவன்

மெலோடியஸ் மியூசிக்

இல.303, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

T.P. 2891

(66771)


# படைவீரர் சங்கத்தின் ஆலோசனைச் சேவை

கொழும்பு, ஜூன் 21

யுத்தத்தில் கொல்லப்படும் படையினரின் மனைவிமாருக்கு ஆறுதல் கூறுவதற்கென ஆலோசனைச் சேவை ஒன்றை நடத்த முன்னாள் படை வீரர் சங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்தச் சங்கம் ஏற்கனவே 30 ஆலோசனை உத்தியோகத்தர்களை நியமித்துள்ளது.

நாட்டில் 200 இராணுவ முகாம்களுக்கு அருகில் இவ்வாறான ஆலோசனைச் சேவை நடத்தப்படும்,

ஆலோசனை சேவையின் பல்வேறு அம்சங்கள் பற்றி ஆராய்வதற்கான 3 நாள் பயிற்சிக் கருத்தரங்கு நேற்று வாதுவையிலுள்ள இராணுவ விடுமுறைக் களிப்பிடத்தில் முடிவடைந்தது.

உயிரிழந்த இராணுவத்தினரின் குடும்பங்களுக்கு ஆறுதல் கூறி அவர்களுக்குத் தேவையான வழிகாட்டல்களை வழங்குவது சங்கத்தின் விசேட பணியாகுமென மேஜர் திருமதி ரமணி காதர் தெரிவித்தார்.

## காணாமற் போன...

(முதலாம் பக்கத் தொடர்)

வன்னி சென்று விடுதலைப் புலிகளுடன் பேச விரும்பினர் என்றும்—

ஆனால் 15 பேர் மட்டுமே வரும்படி விடுதலைப் புலிகள் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு மூலம் தகவல் அனுப்பியுள்ளனர் என்றும்—

இதன்படி அடுத்த மாத இறுதியில் அங்கு செல்ல இருக்கிறோம் என்றும்—அவர் மேலும் தெரிவித்தார்.

வன்னி செல்ல விரும்பும் ஆயிரத்து 500 பெற்றோர் வவுனியாவுக்குச் செல்வர் என்றும்—

அங்கு அவர்கள் தங்கி இருக்க 15 பேர் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குச் செல்வர் என்றும் — அவர் மேலும் தெரிவித்தார்.

அதேநேரம் — வன்னி செல்வதற்காக ஜனாதிபதி ஏற்கனவே அனுமதி வழங்கி விட்டார் என்றும்—

பாதுகாப்பு அமைச்சின் அனுமதியை விரைவில் பெற விருப்பதாகவும்— அவர் கூறினார். (இ-3-21-ரி)

## மற்றும்...

(முதலாம் பக்கத் தொடர்)

ஜெயதிலகா ஆகியோர் செம்மணியில் புதைகுழி இருப்பது தொடர்பான தகவல்களை வெளியிட்டிருந்தனர்.

யாழ். நீதிமன்றத்தில் கடந்த புதன்கிழமை சாட்சியம் அளித்த சோமரத்ன ராஜபக்ஷ மனிதப் புதை குழிகள் இருக்கும் பத்து இடங்களைத் தன்னால் அடையாளம் காட்ட முடியும் என்றும்—

தன்னுடன் மரண தண்டனைக் கைதிகளாக உள்ள ஆர். ஏ. பெரேரா, ஜெயதிலகா ஆகியோரும் புதைகுழிகளைக்காட்டத் தயாராக இருக்கின்றனர் என்றும் — தெரிவித்திருந்தார்.

இதையடுத்தே இந்தப்புதைகுழிகளைக் கண்டு பிடிக்க இவர்களை இங்கு அழைத்து வர நடவடிக்கை எடுக்கப் படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

அடுத்த மாதம் 15 ஆம்திகதி நிபுணர்களின் அறிக்கை யாழ். மேலதிக நீதிவான் எம். இளஞ்செழியன் முன் சமர்ப்பிக்கப்பட்டதும், தோண்டும் பணி ஆரம்பிக்கப்படும் திகதியை நீதிவான் அறிவிப்பார்.

அந்தத் திகதியில் சோமரத்ன ராஜபக்ஷவுடன் இவர்களும் அழைத்து வரப் படுவர் எனத் தெரிவிக்கப் பட்டது. (இ-3-8-164)


விற்பனைக்கு

★ PHOTOSTAT MACHINE (Cannon)
(1215 Recondition)

★ CANNON, SHARP ஆகியவற்றுக்கான TORNER and PARTS.

★ LAMINATING MACHINE (P/C Size)

★ TELEPHONES (1 - Line, 2 - Line)
அதற்குரிய Wire, Pin, Connection Box தேவையான அளவு பொருத்திக் கொடுக்கப்படும்.

தொடர்பு கொள்ளும் முகவரி:-

செல்வம் ஸ்ரோர்ஸ்

330, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(66760)


## உண்டியல் பணம் திருட்டு

தென்மராட்சி, ஜூன் 21

சாவகச்சேரி துர்க்கை அம்மன் கோவிலில் பட்டப் பகலில் துணிகரக் கொள்ளைச் சம்பவம் ஒன்று கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது.

பகல் பூசையை முடித்துக் கொண்டு பூசகர் சென்ற பின்னர் ஆலயத்துக்குள் புகுந்த திருடர்கள் அங்கிருந்த மூன்று உண்டியல்களுக்குள் இருந்த பணத்தையும் ஒலிபெருக்கிச் சாதனங்களையும் எடுத்துச் சென்றுள்ளனர். (இ-117)

## சித்த மருத்துவ பீடத்துக்கு பல வசதிகள்

சாவகச்சேரி, ஜூன் 21

யாழ். பல்கலைக்கழகத்தின் கைதடியில் அமைந்துள்ள சித்த மருத்துவத் துறைப் பீடத்துக்கு என இந்த வருடம் பல திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்தார்.

சித்த மருத்துவத் துறை மாணவர்கள் நலன் கருதி 100 மாணவர்கள் தங்க வசதியாக விடுதி ஒன்று அமைக்கப்படவுள்ளது.

இதற்கான அடிக்கல் இம்மாதம் நடப்பட்டு வேலைகள் தொடங்கப்படவுள்ளன.

இதேவேளை தொலைத் தொடர்பு வசதி, பக்ஸ் வசதி உட்பட யாழ். பல்கலைக் கழகத்துக்கென தருவிக்கப் படவுள்ள 3 ஆட்டோக்களில் ஒன்று ஆகியவை சித்த மருத்துவ பீடத்துக்கு வழங்கப்படவுள்ளன என்றும் அவர் தெரிவித்தார். (இ-31)

## யுனிசெவ் மலசலகூடம் அமைப்பு

வலி. வடக்கு, ஜூன் 21

'யுனிசெவ்' உதவியுடன் நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் 40 புதிய மலசல கூடங்கள் நிர்மாணிக்கப் படுகின்றன.

50 பழைய மலசல கூடங்கள் திருத்தி அமைக்கப்படவுள்ளன.

'யுனிசெவ்' நிறுவனத்தால் இதற்கெனச் சுமார் ஏழு லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்தப் பகுதியில் வசிக்கும் மிகவும் வறுமை நிலையில் வாழும் குடும்பங்களுக்கே இந்த நிதி உதவி அளிக்கப் படவுள்ளது.

புதிய மலசல கூடங்களை நிர்மாணிப்பதற்கு 12 ஆயிரம் ரூபா வீதமும் பழைய மலசல கூடங்களைத் திருத்தி அமைப்பதற்கு 4 ஆயிரம் ரூபா வீதமும் வழங்கப்படவுள்ளது.

கிராம அலுவலர் பிரிவு ரீதியாகப் பெயர்ப் பட்டியல் [illegible] இந் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. (இ-86)

# நான்கு யானைகள் மின்சாரத்துக்குப் பலி!

## மட்டக்களப்பில் சம்பவம்

கொழும்பு, ஜூன் 21

கிழக்கு மாகாணத்திலுள்ள காட்டில் 4 யானைகள் அதி சக்தி வாய்ந்த மின்சாரம் தாக்கியதன் காரணமாக உயிரிழந்துள்ளன.

ஓர் ஆண் யானை முதலில் அதி சக்தி வாய்ந்த மின் கம்பிகளைத் தொட்டதன் காரணமாக மின் தாக்குதலுக்கு உள்ளானது என்றும்—

மற்றைய 3 யானைகளும் மின்சாரத்தில் சிக்கிய யானையை மீட்கச் சென்ற போது மின்சாரத்தினால் தாக்கப்பட்டன என்றும் —அதனை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு மாவட்ட மின் விநியோகத்தை சீர்குலைக்கும் நோக்கத்துடன் தகர்க்கப்பட்ட மின்சாரக் கம்பியில் இருந்தே மின்சாரம் பாய்ந்து யானைகள் இறந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-ரி)

# கணக்காளர் சேவைப் பரீட்சை

நவாலி, ஜூன் 21

இலங்கை கணக்காளர் சேவையின் வகுப்பு இரண்டு தரம் இரண்டுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சைக்குத் தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்தப் பரீட்சை ஓகஸ்ட் மாதம் 7 ஆம் 8 ஆம் 9 ஆம் 10 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் நடத்தப்படும் என்று பரீட்சை ஆணையாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பங்கள் அனுப்புவதற்கான முடிவு திகதி இம்மாதம் 28 ஆம் திகதி ஆகும். இதுசம்பந்தமான முழு விவரங்களும் 28—05—99 ஆம் திகதி வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது (இ-100)

## மாணவருக்குப் பால்

கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி மாணவர்களுக்குப் பால் வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

போஷாக்குத் திட்டத்தின் கீழ் பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்தத் திட்டத்தின் கீழ் வாரத்தில் மூன்று நாள்கள் இந்த மாணவர்களுக்குப் பால் வழங்கப்பட்டு வருகிறது. (இ-173)

## கணித விஞ்ஞான போட்டிகள்

ஜூலை மாதத்தில் கணிதம், விஞ்ஞானம் சம்பந்தப்பட்ட பல போட்டிகளை பாடசாலை மாணவர்களிடையே நடத்த வலிகாமம் வலய கணித — விஞ்ஞான பாட உதவிக் கல்விப்பணிப்பாளர்கள் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

கணிதம் — விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் வினாடி— வினாப் போட்டிகள், கணித — விஞ்ஞான பாட கற்பித்தல் உபகரணங்கள் தயாரித்தல் போன்ற பல போட்டிகளை நடத்த திட்டமிட்டுள்ளனர். (இ-152)

## திருட்டு

பகல் நேரம் வீட்டில் எவரும் இல்லாத சந்தர்ப்பத்தில் அந்த வீட்டை உடைத்துத் தங்க நகைகள் உட்பட பல பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

அளவெட்டியில் கடந்த வெள்ளிக்கிழமைஇடம்பெற்ற இந்தத் திருட்டுச் சம்பவத்தில் சுமார் இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகள் உட்பட திருடப்பட்டுள்ளன.

தெல்லிப்பளை பிரதேச செயலாளர் பிரிவில் கடமையாற்றும் ஊழியர் ஒருவரின் வீட்டிலேயே இத் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றது.

## சிப்பாய்...

(முதலாம் பக்கத் தொடர்)

துக்குச் சென்ற பிரஸ்தாப சிப்பாய் அந்த நிலைய உரிமையாளரிடம் மோட்டார் சைக்கிளை வாங்கிக்கொண்டு சிகரெட் வாங்கக் கடைக்குச் சென்ற சமயமே இந்தவிபத்து இடம்பெற்றது.

[இ-3-164]

## உலகக் கிண்ணம்...

(முதலாம் பக்கத் தொடர்)

ஆஸ்திரேலிய அணி 20.1 ஓவர்களில் இரண்டு விக்கெட்டுக்களை இழந்து 133 ஓட்டங்களைப் பெற்று 8 விக்கெட்டுக்களால் வென்று உலக சாம்பியன் ஆனது.

1987 ஆம் ஆண்டும் ஆஸ்திரேலியா வெற்றிக் கிண்ணத்தைக் கைப்பற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-3-ரீ)

## ஆனையிறவு...

[முதலாம் பக்கத் தொடர்]

உட்பட வெடி பொருள்கள் மீட்கப்பட்டு வருவதாகவும் —

இந்தப் பகுதியில் புலிகள் நடமாடித் தாக்குதலுக்குத் தயாராவதையே இது காட்டுகின்றது என்றும் — அந்த அதிகாரிகள் மேலும் தெரிவித்துள்ளனர்.

பரந்தன் முன்னணி அரங்கு படையினருக்கு மிகவும் அத்தியாவசிய காவலரணாக அமைந்துள்ளது என்றும் அவர்கள் தெரிவித்தனர். (இ-3-8)


கௌரி தொலைத் தொடர்பு சேவை

கௌரி தொலைத் தொடர்பு சேவையுடன்

போட்டோக்கொப்பி சேவையையும்

16—06—99 முதல் ஆரம்பித்துள்ளோம் என்பதை வாடிக்கையாளர்களுக்கும், நண்பர்களுக்கும் மிகவும் மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

தொலைபேசி இலக்கம்

உள்ளூர் — 070 — 212427

வெளியூர் — 0094 — 70 — 212427

இராமநாதன் கல்லூரிக்கு முன்பாக

கே. கே. எஸ். வீதி, மருதனார்மடம்.

[66699]



இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் [பிறைவேற்] லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் [illegible] வீதி 361, ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 21- -06 1999 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org